

சிலம்பு உ௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௪, மார்கழி சனவரி, 1954 | பரல் ௫

தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும்!

தமிழ்மொழி, தமிழர் தாய்மொழிமட்டுமல்ல. நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்வரையில், அது தமிழகத்தின் ஆட்சிமொழியாக ஆயிர, பதினாயிரக் கணக்கான ஆண்டுகள் நிலவியுள்ளது. தன்னரசைத் தான் ஆண்டதுடன் அமையாமல், சேர சோழ பாண்டியர் தமிழ்ப்பேரரசராயிருந்த காலங்களிலெல்லாம், அதுவே கங்கம், கலிங்கம், வங்கம் முதலிய நிலங் கடந்த எல்லைகளிலும், ஈழம் (இலங்கை), கடாரம் (மலாயா), பழந்தீவம் (மாலத்தீவு) ஆகிய கடல்கடந்த எல்லைகளிலும் தன்மொழி வைத்து ஆண்டிருக்கிறது. அத்துடன் மற்றப் பல மொழிகளைப் போலல்லாமல், தமிழ் தமிழரின் சமயம், இலக்கியம், கலை, அறிவுத்துறை, பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளையும் அளாவிய முழுநிறை தேசியமொழியாகவும் அமைந்துள்ளது. இத்தகைய மொழி ஆட்சிமொழியாக வாய்ப்பளித்தால், திறம்பட்ட ஆட்சிமொழியாகவும், மற்றத் தாய்மொழிகளுக்கு வழிகாட்டியாகவும், உலக நாகரிகத்தை இன்னும் உயர்த்தி வளப்படுத்தும் மொழியாகவும் இயங்கும் என்பதை எவரே மறுக்கமுடியும்?

தமிழின் இன்றைய நலிவுக்குரிய தலையான காரணம் ஒன்றே ஒன்றுதான்—நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் வெள்ளையர் இந்நாட்டின் ஆட்சியையும் கல்வித்துறையையும் கைப்பற்றியபோது, தமிழ் ஆட்சிமொழிப் பதவியையும் கல்வித்

துறையில் முதனிலையையும் ஒருங்கே இழந்துவிட்டது. தமிழறிஞரும் தலைவரும் எத்தனையோ தமிழியக்கங்களாலும், தனித்தமிழ் இயக்கங்களாலும், தமிழர் இயக்கங்களாலும் இந்நலிவைப் போக்க முயன்றுள்ளனர்; ஆனால், அவற்றால் நலிவைத் தடுத்து நிறுத்த முடிந்ததேயல்லாமல், ஆக்கமுறையில் தமிழை வளம் பெற வளர்க்கமுடியவில்லை. தமிழுக்குப் பாடுபடுபவர் அனைவரும் வறுமையிலும் உரிமையற்ற நிலையிலும் கிடந்துதான் பாடுபடவேண்டிய சூழ்நிலை அமைந்துள்ளது. ஏழைத் தமிழன் தமிழ்க்குரல் ஆட்சியம்பலமேற வகையற்றுத் தவிக்க வேண்டியதாயுள்ளது. இந்நிலை மாறவேண்டுமானால், தமிழர் அனைவரும் கிளர்ந்தெழுந்து தமிழை ஆட்சிமொழியாக்கித் தீர வேண்டும்.

மாநிலம் தன்னாட்சிபெற்று ஆறு நீண்ட ஆண்டுகள் ஆய்விட்டன. இன்னும் தமிழ்மொழி மீட்டும் தன்னாட்சி பெற்றபாடில்லை. நம் மாநிலத்துடன் ஒரே நாளில் தன்னாட்சி பெற்ற சின்னஞ்சிறிய இலங்கையில், சிங்களமொழி மட்டுமன்றி, நம் தமிழ்மொழியும் சரிசமமாக அரசியல்மொழியாக ஆக்கப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம தமிழ்நாட்டுத் தமிழா மட்டும் தமிழின் உரிமையைப் பாதுகாக்க முடியவில்லை என்பது தமிழில் பற்றுடைய தமிழர் அனைவர்க்கும் வருத்தந தரத்தக்க நிலையே யன்றோ? அயலாராகிய சிங்களவரிடமிருந்து இலங்கைத்தமிழர் பெற்ற இந்த மொழியுரிமையை நம்மவராகிய நம் தாய்நாட்டு ஆட்சியாளரிடமிருந்து நாம்பெற முடியாதா?

அண்டைவீட்டு மொழிநாடாகிய ஆந்திரம் தன்மொழிநாடு பெற்றதுடன், உடனடியாகத் தன் மொழியாட்சியும் நிறுவியுள்ளது. தமிழர் ஆட்சி செய்யும் தமிழகம் மட்டும ஆந்திரருக்கு இவ் இருவகையிலும் பின்னிடைந்து நிற்பது காணத தமிழன்பர் வருந்தாதிருக்க முடியாது.

மத்தியபாரதத்தின் நிலை இபபோதைய சென்னையின் நிலையிலிருந்து வேறுபட்டதன்று. மராத்தி மொழியைப் பெரும்பான்மை மக்கள் பேசுகிறார்கள். ஆனல் மொழிஎல்லை பிரிக்கப் படவில்லை. ஆயினும் அரசியலாரின் மொழிநேர்மையை இது தடுக்கவில்லை. அவர்கள் மராத்தியை ஆட்சிமொழி ஆக்கிச்

சட்டம் செய்து தம் நாட்டுப்பற்றை மெய்ப்பித்திருக் கிறார்கள்.

தமிழக ஆட்சியாளரும இதுபோல முன்வந்து தமிழை ஆட்சிமொழியாக்கிச் சட்டம் அமைத்திருந்தால், அது அவர்கள் பெருமைபடததக்க ஒரு செயலாயிருந்திருக்கும். ஆனால் பொதுமன்றத்திலும் மேல்மன்றத்திலும் தமிழ்ஆர்வமும் நாட்டாாவமும் உடைய சில உறுப்பினரே இதற்கான சட்டம் கொண்டு வர முயற்சி செய்து வருவதாக அறிகிறோம். இது வரவேற்கத்தக்கது. தமிழன்பர் உள்ளப்புண்ணுக்குப் பேரளவு ஆறுதலும் தருவதே. இதற்காதரவாகச் சென்ற திசம்பர் 20-ம் நாள சென்னை அண்ணாமலை மன்றத்தில், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் முயறசியால், தமிழ் ஆட்சிமொழி மாநாடு ஒன்றும் நடைபெற்றிருக்கிறது. ஆளும் கட்சிததலைவர்கள், எதிர்கட்சித்தலைவர்கள்உட்பட, கிட்டத்தட்டத தமிழகத்தின் எல்லாக் கட்சியினரும் கட்சிச் சார்பற்ற அறிஞரும் கலைஞரும் தலைவரும் இமமாநாட்டில் கலந்து, தமிழை ஆட்சிமொழியாக்கு வதற்குப் பேருக்கம் அளித்துள்ளனர். தமிழ் உள்ளார்வமும், தமிழர் அனைவரின் ஒருமிதத பேராண்மையு முடைய இம்மா நாட்டின் முடிவும் அறிநது தமிழ்மக்கள் மொழிச்சீட்டால் தேர்வுபெற்ற மன்ற உறுப்பினரும், ஆட்சியாளரும் விரைவில் தமிழ்ஆட்சிமொழிச் சட்டத்தை நிறைவேற்றிச் செயற்படுத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

'மொழிவாரி மாநாடு இன்னும் அமையவில்லை; அது அமைநதபின் தமிழ் ஆட்சிமொழியாய் விடும்' என்று தமிழருக் கெதிராகச் சிலா வாதிடக்கூடும். இது நொண்டிச்சாக்கு. நேர்மையுமற்றது. ஏனெனில் ஒரு தவறை அடைக்க இன் னொரு தவற்றைப் பயன்படுத்துவதாகவே இது அமைகிறது. மொழிவாரியாக நாடு பிரிவதை விரும்பாதவாகளே, மொழி வளர்ச்சிக்கு எதிராகப் பன்மொழி ஒற்றுமையை ஒரு முட்டுக் கட்டையாக எடுத்துக்காட்ட முன்வந்து விடுகின்றனர். உண்மையில் மொழிநாடு அமைந்துவிட்டபின்கூட மொழிச் சிக்கல் தீர்ந்துவிடாது. நாட்டுமொழி ஆட்சிமொழி ஆனால் மட்டுமே தீரும். ஆகவே, மொழிநாடு அமைப்பது வேறு;

ஆட்சிமொழிச் சட்டம் வேறு. ஒன்றன் முதன்மையை ஒன்று குறைக்காது, நிறைவுபடுத்தவே செய்யும்.

இப்போது சென்னை அரசுக்குச் சட்டப்படி ஆட்சிமொழி எதுவும் இல்லை. பதினொரு ஆண்டுகளில் ஆங்கிலமும சட்டப்படி விலக இருக்கிறது. அதன்பின் ஆங்கிலமொழியின் இடத்தில் இந்திதான் அமரமுடியும். தமிழ் ஆட்சிமொழி ஆகும் வாய்ப்பை அதற்குள் ஏற்படுத்தாவிட்டால், தமிழர் மொழியுரிமைக்கு எளிதில் நீக்கமுடியாத பெருங்கேடு ஏற்பட்டுவிடும்.

பெரும்பான்மை மொழியை ஆட்சிமொழியாக்கச் சட்டப்படியோ, மக்களாட்சிமுறைப்படியோ எத்தகைய தடையும் கூற முடியாது. ஆந்திரநாட்டில் தமிழ் பேசுபவர் இருந்தாலும், தெலுங்கு ஆட்சிமொழியாகியுள்ளது. மத்தியபாரதத்தில் மராத்தியை ஆட்சிமொழியாக்கி அரசியலார் சட்டம் அமைத்தது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு மாறானதன்று என்றே கூட்டரசின் முறைமன்ற நடுவர் தீர்ப்பளித்துள்ளனர்!

திருச்சிராப்பள்ளியில் தமிழாட்சிபற்றிய தேர்வு நடந்து வந்துள்ளது. ஆட்சிமொழிச்சட்டம் ஆக்குவதற்குமுன் அதன் முடிவறிய வேண்டும் என்று சென்னை முதல்வர் சட்டமன்றத்தில் பேசியுள்ளார். ஆனால், தேர்வுமுறைகள் நடைமுறைத் திட்டங்களுக்கான முதற்படி மட்டுமே. தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்ற நோக்கத்தையோ, அதற்கான சட்டத்தையோ அது பாதிக்கத் தக்கதன்று. தமிழர் உரிமை காக்கும் முயற்சியில் இத்தகைய முட்டுக்கட்டை போடுவது தமிழக நலனுக்குப் பாதகமானது என்று கருதுகிறோம்.

தமிழ் ஆட்சிமொழி ஆகும்வரை மாநிலம் தன்னாட்சி பெற்றதனாலான பயனைத் தமிழும் தமிழரும் அடைந்தவர் ஆகமாட்டார். ஆகவே, தமிழகத்துக்கும் மாநிலத்துக்கும் உரிய தம் கடனாற்றத் தமிழகப் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து மன்ற உறுப்பினருக்கும் ஆட்சியாளருக்கும் ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறோம்.

ஆட்சிமொழி மாநாட்டு நிகழ்ச்சிகள்

கடந்த 20—12—1953 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில், சென்னை அண்ணாமலை மன்றத்தில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு இனிது நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திருவாளர் ஆ. சபாபதி நாயகர் பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி. அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஆயிரக்கணக்கான தமிழன்பர்கள் இம்மாநாட்டில் கலந்து தம் மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையுந் தெரிவித்தனர்.

வரவேற்புரை

தமிழ் ஆட்சிமொழி மாநாடு பிற்பகல் 3-மணிக்குத் துவக்கப்பட்டது. முதன் முதலில் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் தமிழ் வாழ்த்துப்பாடல் பாடினார்கள். பின்னர் வரவேற்புக்கழகத் தலைவரான செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் திருவாளர் சொ. அமிர்தகணேச முதலியார், பி.ஏ., அவர்கள் மாநாட்டிற்குவந்த தலைவர்களையும், திரளான பெருமக்களையும் தாய்மார்களையும் வரவேற்று மாநாட்டை நடத்த வேண்டியதின் இன்றியமையாமையைப் பற்றிப் பேசினார். அவர் பேசியதாவது

“இந்நாட்டின் வரலாற்றிலேயே இது ஒரு சிறந்த நாள். நம் நாட்டின் குடியரசு வரலாற்றில் ஒரு புதிய முன்னேற்றம் காண, கட்சி சமயம் முதலிய எத்தகைய வேறுபாடுகளுமின்றி தமிழை ஆட்சிமொழியாக்கி நம் உரிமையைப் பேணுவதற்கு நாம் இங்குக் கூடியிருக்கிறோம். நாம் கேட்பது புதுமையான தொன்றுமில்லை. புரட்சியாகக்கருதக் கூடியதுமில்லை. எல்லா நாடுகளும் தத்தம் மொழியில் ஆட்சி நடத்திவருகின்றன. ஆனால், இன்று நமது நாட்டில், ஆட்சியின் பல துறைகளிலும் மேல் மட்டத்தில் வழங்கிவருவது பிறநாட்டு மொழியாகிய ஆங்கிலமே இது எங்குமில்லாத காட்சி. இயற்கைக்கு மாறுபட்ட முறை.

இதை மாற்றி நம் மொழியையே நமது சென்னை இராச்சியத்தில அரசியல் மொழியாகக் கொள்ளவேண்டுமென்பது நம் அவா. இதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நமக்கு இடமளிக்கிறது. அச்சட்டத்திற்கு இணங்க நம் நாட்டில் தமிழை ஆட்சிமொழியாக்க முடிவு செய்தற் பொருட்டே நாம் இங்குக் குழுமியுள்ளோம். ஒரு இராச்சியத்தின் ஆட்சிமொழி வகுப்பதற்கு யாது செய்யவேண்டுமென அரசியல் அமைப்புப் பின் வருமாறு கூறுகிறது;—

'ஒரு இராச்சியத்தின் சட்டமன்றம் சட்டத்தினால் அந்த இராச்சியத்தில் வழங்கிவரும் மொழிகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது இந்தியையோ அந்த இராச்சியத்தின் அரசியல் காரியங்கள் எல்லாவற்றிற்குமாவது அல்லது எவற்றிற்குமாவது பயன் படுத்தவேண்டிய மொழி அல்லது மொழிகளாகக் கொள்ளலாம்.'

இதற்கேற்பத் தமிழை நமது இராச்சியத்தில் அரசியல் மொழியாகச் செய்யவேண்டுமென்பது நமது ஒருமித்த விருப்பமென்று உலகிற்கும், அரசினர்க்கும் தெரிவிக்கவே நாம் இங்குக் கூடியிருக்கிறோம். அரசியலமைப்பில் நமக்கு அளித்திருக்கும் இந்த உரிமையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுவது நமது கடமை. நாம் சிறிதும் காலந்தாழ்த்தாமல் உடனே செய்ய வேண்டிய வேலை இது. நாடு உரிமை பெற்று ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசியல் சட்டத்தின்படி இன்று நமது இராச்சிய ஆட்சிக்கு ஆட்சிமொழி என்பது ஒன்று இல்லை. ஆட்சி அலுவலகங்களில் அரசியல் சட்டத்தின் தொடக்கத்திற்குமுன் ஆங்கிலம் வழங்கிய காரியங்களுக்கு மட்டுமே தமிழ் மொழி பயன்படுத்தலாம் என்று அரசியலமைப்புக் கூறுகிறது. இன்னும் 11 ஆண்டுகளில் ஆங்கிலம் அகற்றப்படும். அதற்குள் தமிழ் ஆட்சிமொழி ஆகாவிட்டால், நமது நிலை என்ன ஆகும் என்று எண்ணிப்பாருங்கள்! இன்றே தமிழ்மொழியை ஆட்சி மொழியாகச் சென்னைச் சட்டமன்றம் சட்டத்தினால் இயற்றினால்தான் ஆங்கிலம் அகன்றபின் இடரின்றித் தமிழ் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து வழங்கமுடியும். இன்று அப்படித் தமிழை ஆட்சிமொழியாக முடிவு செய்யாவிட்டால் நாம் பின்னர் வருந்த நேரும். செய்யவேண்டியதை உரிய காலத்தில் செய்யாத பழியும் நம்மைச்சாரும். அரசியல் சட்டத்தின் 210-ம் பிரிவு இதுபற்றி நமக்கு எச்சரிக்கை செய்கிறது.

அரசியல் அமைப்பு 347-வது பிரிவில் ஆங்கிலத்தில் தன் கருத்துக்களைத் தெரிவிக்கத் திறமையற்றவர்களுக்கு மட்டுமே தாய்மொழியில் பேசத் தலைவர் அனுமதியளிக்கலாம் என்று கண்டிருக்கிறது. ஆங்கிலம் தெரிந்த பிரதிநிதிக்குத் தம் தாய் மொழியில் பேச உரிமை இல்லை. அவரைத் தேர்ந்தெடுத்தவர்களுக்குத் தங்கள் மொழியில் அவரது பேச்சைக் கேட்கும் உரிமை இல்லை.

மலையாளம், தென்கன்னடம் ஆகிய இரு மாவட்டங்கள் இன்னும் நம் நாட்டோடு இணைந்து இருத்தலால் தமிழ்மொழி

ஆட்சிமொழி ஆவது பொருந்துமா என்று சிலர் வினவலாம். அந்த மாவட்டங்களில் அவர்கள் மொழிகளை ஆட்சிமொழியாக வழங்குவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அவர்களது அந்த உரிமையைக் காக்கும விதி அரசியல் அமைப்பின் 347-வது பிரிவில் உள்ளது. அவர்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ள லாம். ஆனால், இந்த இராச்சியத்தில் பெரும்பான்மையோராக இருக்கும் நாம் நம்மொழியை ஆட்சிமொழியாக ஆக்கிக்கொள் வதைத் தடுக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. இரண்டு மாவட்டங்களில் வேற்றுமொழி பேசுவோர் இருப்பதால் நம் முன்னேற்றம் தடைப்படவேண்டுமா? நம உரிமை பறிக்கப் படவேண்டுமா?

தமிழை ஆட்சிமொழியாக்க முடியுமா என்று கேட்போ ருக்கு இரண்டொன்று கூறவிரும்புகிறேன். இன்று நாட்டில் நடப்பதை அவர்கள் நோக்குதல் வேண்டும் நிலவரித்துறை யில் தாசில்தார அலுவலகம் உட்பட அதற்குக் கீழுள்ள எல்லா இடங்களிலும் தமிழே ஆட்சிமொழியாக இருந்துவருகிறது.

தமிழிலேயே பஞ்சாயத்துக்களிலும், நாட்டாண்மைக் கழகங்களிலும் நகராண்மைக் கழகங்களிலும் ஆட்சி நடை பெறுகிறது. மற்ற அடிப்படை அரசியல் அலுவலகங்களிலும் அப்படியே இப்போது வேண்டுவதெல்லாம், இவ்வடிப்படை அலுவலகங்கள மட்டுமன்றி அதற்கு மேலுள்ள அலுவலகங் களிலும தமிழிலேயே பணியாற்ற வேண்டுமென்பதுதான். அது எளிதே என்று ஐயமின்றிக் கூறலாம்.

அரசியல் பொருளியல் பற்றிய சிக்கல்கள், பேச்சுக்கள் முடிவுகள் பற்றிய செய்திகளும், நுணுக்கமான குறிப்புக்களும் உடனே தமிழ்ப்படுத்தப்பெற்று வானொலியில் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. செய்தித்தாள்களில் வெளியிடப்படுகின் றன. வானொலி உரைகளைக் கேட்பதற்கும், செய்தித்தாள்கள் படிப்பதற்கும எழுத்தாளா (கிளார்க்குகள்) முதலிய ஆட்சித் துறை ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்கிவிட்டால், அவர்கள் எளிதாக எல்லாவற்றையும் தமிழில் எழுதும் திறமை பெறு வார்கள். தேவையானால், அவர்களுக்குச் சிறிது பயிற்சியும் அளிக்கலாம். இன்று மந்திரிகள் தம் ஆட்சிக் கொள்கைகளை யும், திட்டங்களையும் தமிழிலதானே மக்களிடத்தில் எடுத் துரைக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழில் சொல்ல இயலாமலா போயிற்று?

தமிழ் ஆட்சிமொழியானால் ஆட்சிச்செலவு அதிகமாகுமே என்ற கேள்வியையும நாம் கருதக் கடமைப்பட்டுள்ளோம்,

நாளாக ஆக ஆட்சிச்செலவு குறையுமேயன்றி அதிகமாகாது. தமிழ் ஆட்சிமொழியாக அமையும் காலததில் தொடக்கச் செலவு சிறிது ஏற்படலாம். தமிழ் டைபரைட்டர்கள் வாங்க வேண்டியதிருக்கலாம். ஆட்சிசசொல் அகராதிகள் தொகுக்க வேண்டியதிருக்கலாம். வேறு ஒரு செலவும் ஏற்பட்டுவிடாது. தமிழ் ஆட்சிமொழியானல், நாட்டுக்கும் சமூகத்துக்கும் பல வகை நலன்கள் விளையும். கடநத ஒரு நூற்றுண்டில் நம் நாட்டில் முன்னர் இல்லாத ஒரு புதிய சாதிப் பகுப்புத் தோன்றியுள்ளது. ஆங்கிலம் கற்று ஆட்சி நடத்துவோர் உயாநத சாதியைச் சேர்ந் தவர்கள்; ஆங்கிலம் அறியாத மக்கள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள்; என்ற இந்த வேறுபாட்டு உணர்ச்சி ஒழிதல் வேண்டும். ஆங்கிலம் நன்கு தெரியாதவர்கள் மந்திரிகளாகவா வது சட்டமன்ற உறுப்பினராகவாவது வநதால் ஆட்சி நடத்தும ஊழியர் அவர்களைப்பற்றிக் குறைவாய் எண்ணுமநிலை மாற வேண்டும். தமிழ்ஆட்சிமொழியாக வநதால் ஆஙகிலம கற் ரோர் தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணத்துணியார். தமிழ்ஆட்சிமொழியானல் மக்களுக்கும் ஆட்சி நடத்துவோருக் கும் நெருங்கிய தொடர்பு உண்டாகும. நம் நாட்டு ஆட்சி உண்மையாகவே, மக்களாட்சியாக விளங்கும்.''

துவக்கஉரை

பின்னர் சட்டசபை உறுபபினரும், திராவிட பார்லி மெண்டுக் கட்சித் தலைவருமாகிய திருவாளர், எஸ் சுயம்பிரகாசம் அவர்கள் துவக்கஉரை நிகழ்த்தினாகள். அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது :

“நாடு நமதானபின் அநத அநத இடத்தின் மொழி மக்க ளுக்கு உரியதாக ஆகவேண்டும். பழநதமிழ் வளம்பெற்ற மொழி; ஆட்சிமொழியாக இருக்க இம்மொழி முற்றிலும் தகுதி வாய்ந்தது. இனிமை, இன்பம எனனும் பொருள்கொண்டது தமிழ். எனினுமம, இன்று தமிழின் பெருமையால் தமிழன் பயன் பெற முடியாமலிருக்கிறது. சிறந்த கருவூலம் நம்மிடம் இருக் கிறது. அதைப் பயன்படுததும கருவியாகவே இந்நாள் நாம் கூடியிருக்கிறோம். தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டுமானல், மக்கள் கிளர்ச்சியின் மூலமே சட்டம் திருததப்படவேண்டும். கிளர்ச்சி இல்லையென்றால், கோரிக்கைக்கு மதிப்பு கிடைக்கா தல்லவா? தமிழ் நாட்டில் தமிழே ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்ற உரிமையை நிலைநிறுத்த இன்று முதல்கூட்ட மாகக் கூடியிருக்கிறோம். நமது மொழி சிறநத மொழி; உலக

முழுவதும் ஓசையைக் கிளப்பவேண்டுமென்று வீணே பேசுவ தால் மட்டும் பயனில்லை. கிளர்ச்சி செய்ய நாம் தயங்கக் கூடாது."

ஆண்டு அறிக்கை

பின்னர்ச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் அமைச் சர், டாக்டர் இ. மு சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தமிழ்ச் சங்கத் தின் ஆண்டு அறிக்கையைப படித்தார். சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம பல ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சி குறிதது்ப் பாடுபட்டு வருவதாகவும், கலைசசொல் ஆக்கத்திற்கு அரசினரோடு கலந்து செய்த இன்றியமையாத பல வேலைகளை நிகழ்ச்சிகளோடும் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழி ஆகும்வரை நாம் ஓய்ந்திருக்கலாகாது என்றும வற்புறுத்தினர்.

அவர் மேலும் கூறியதாவது :

"நமது இந்தியக் கூட்டுக் குடியரசு தோன்றிப் பல ஆண்டுகள் ஆகியும் தமிழ் தெலுங்கு முதலிய தாய்மொழிகள ஆட்சி மொழிகள் ஆகாமலும், ஆவதற்கு வேண்டும் முயற்சி கூடத் தோன்றாமலும் இருப்பதை அறிநது நமது சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 11—7—1952ல் சென்னைக் கவானரவர்களுக்கும் தலைமை மந்திரியாரவர்களுக்கும அதுபற்றி ஒரு விண்ணப்பம் அனுப்பியது. அதற்குக் கவர்னர் மட்டும அவ்விண்ணப்பத்தை அரசாங்கத தலைமைச் செயலருக்கு (Chief Secretary) அனுப் பியிருபபதாக 16—7—1952ல் மறுமொழி விடுத்தனர். பயன் ஒன்றும் விளையவில்லை; அதனால், தமிழ் ஆட்சிமொழி மாநாடு நடத்தி நாட்டில் உணர்சசியை வளர்தததல் இன்றியமையாத தென்று நமது சங்கம் உணாந்து 12—10—1952ல் திருநெல் வேலியில் ஒரு பொதுக்கூட்டத்தை நடததி, "சென்னையில் ஆட்சிமொழி மாநாடு நடத்தவேண்டும்" எனறு தீாமானித்தது. அன்றே சஙகத்தின் தொழிற்கழகம் கூடி உயர்திருவாளர் இ. மு சுப்பிரமணியபிள்ளை (சங்க அமைச்சர்) அவர்களையும் உயர்திருவாளர், வ. சுப்பையாபிள்ளை (சைவ சிததாந்த நூற் பதிப்புக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர்) அவர்களையும் மாநாட்டு அமைச்சர்களாக நியமித்து மாநாடு பறறிய எல்லாப் பணிகளையும் ஆய்நது செய்து முடிக்குமாறு அவர்களுக்கு உரிமையை அளித்தது.

மாநாட்டு அமைப்புக்கூட்டம் சென்னையில் 26—10—1952 லும் 21—12—1952லும் நடைபெற்றது. சென்னை முழுமையும் சுவரொட்டிகளின்வழியாகத் தமிழ் ஆட்சிமொழி மாநாடு விளம்

பரம் செய்யப்பெற்றது; தமிழ்நாடு முழுமையிலும் உள்ள சங்கங்கள் மாநாட்டு அமைச்சர்களின் வேண்டுதலின்படி பொதுக்கூட்டங்கள் போட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பின. அந்நிலையில் தெலுங்கு நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி மிக ஓங்கிற்று. அதுபற்றிப் பொட்டி என்பவர் பட்டினி கிடந்து தம் உயிரைவிட்டார். தெலுங்கு நாட்டுப் பிரிவினையைச் சென்னை அரசாங்கமும் தில்லி அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு ஆவன செய்யத் தொடங்கின. அதனால் தெலுங்குநாட்டுப் பிரிவினையின் பின்னரே தமிழ் ஆட்சிமொழி மாநாட்டைக் கூட்டவேண்டும் என்ற தீர்மானம் நிறைவு பெற்றது.

தெலுங்குநாடு பிரிந்துவிட்டது; தெலுங்கைத் தமது நாட்டு ஆட்சிமொழியாக்க அந்நாட்டு மந்திரிமார்களும் உறுப்பினர்களும் யாவரும் ஒருமுகமாக முடிவுசெய்து தெலுங்கிலேயே பேசிவருகின்றனர். ஆதலின் தமிழ்நாட்டிலும் தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கு முன் ஒத்திவைத்த மாநாட்டை நடத்தவேண்டும் என்று அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ் மாநாடு தீர்மானித்தது. 13—12—1953 ஞாயிறன்று உயர் திருவாளர் ஆ. சுப்பையாபிள்ளையவர்கள் தலைமையில் சென்னை மாநகரத்திலே மாநாட்டு அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதில் வரவேற்புக் கழகம் அமைக்கப் பெற்று மாநாட்டுக்கு வேண்டிய நாள், இடம், தலைமை முதலியனவெல்லாம் தீர்மானிக்கப்பெற்றன. அத்தீர்மானத்தின் வண்ணம் தமிழ் ஆட்சிமொழி மாநாடு இன்று இவ்வண்ணாமலை மன்றத்திலே நடைபெறுகின்றது.''

தலைவர் தேர்தல்

பின்னர், திருவாளர் ஆ. சபாபதி நாயகரவர்களைத் தலைமை தாங்கி ஆட்சிமொழி மாநாட்டைச் சிறப்புற நடத்தித்தருமாறு திரு. இ. மு. சு. அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

தலைவர் தேர்தலைச் சங்க அமைச்சர் திரு. இ. மு. சு. அவர்கள் முன் மொழிந்தபின் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வழி மொழிந்து பேசியதாவது.

"தலைவரவர்கள் இம் மாநாட்டுக்குத் தலைமைதாங்க மிகப் பொருத்தம் உடையவர். அவர் ஓர் சட்ட நிபுணர்; மாவட்ட நீதிபதியாகவும், செஷன்ஸ் நீதிபதியாகவும், தனி நீதிபதியாகவும் இருந்தது மட்டுமன்றிப் பல இடங்களில் திருவள்ளுவர் கழகங்களை நிறுவித் தமிழுக்கே வேலை செய்து வருகிறார். சமீப

தமிழ் ஆட்சிமொழி மாநாடு, சென்னை—20-12-53



ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி, திருவாளா,
ஆ. கசபதி நாயகா அவாகள், பி ஏ, பி எல், எம. எல். சி
தலைமைப்பேருரை நிகழ்த்துதல்



சட்டசபை உறுப்பினா, திருவாளா,
கே விநாயகம் அவர்கள், எம எல் ஏ, எம சி
சொறபொழிவாறறுதல்

ஒழிப்புச் சங்கத்திற்குத் தலைவராக இருந்து தொண்டாற்று பவர். இவர் எவ்வகையிலும் இம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கத் தகுதி உடையவர்." என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் "மாநாட்டின் முடிவு தமிழனுக்கு வேண்டி யது; தமிழ்மொழிக்கு வேண்டியது; சாதியால், சமயத்தால் யாரும் பிளவுபட வேண்டியதில்லை" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து மேல் சட்டஅவை உறுப்பினர் திரு வாளர் ஆ. சுசபதி நாயகர் பி ஏ., பி. எல்., எம். எல். சி அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, தம் தலைமைச் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அது வருமாறு:

தலைமைப் பேருரை

"சென்னை மாகாணத்திற்குச் சென்னியாய் விளங்கும் சென்னையம்பதியில், இன்று கூடும் "தமிழ் ஆட்சிமொழி மாநாட்டுக்குத் தலைமை தாங்கித் தமிழ்ப்பணி ஆற்றுக" என்று பணித்தருளிய சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கத்தாருக்கு என் வணக்கமும், நன்றியும் உரியவாகுக.

தென்இந்தியப் பகுதியில் நான்கு மொழிகளைப் பேசு கிறார்கள். அம்மொழிகள் முறையே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம். இம்மொழிகள் நான்கும் திராவிட மொழிகளாத லால் இம் மொழி பேசுகிறவர்களைத் திராவிடமக்கள் என்பர். இவர்கள் தென்னாட்டில் ஒவ்வொரு தனித்த, குறிப்பிடத்தக்க பகுதிகளிலே வாழ்ந்து வருவதையும் பார்க்கலாம்.

இப்போது ஆந்திரமக்கள் பிரிந்து ஆந்திர நாட்டை அமைத்துக்கொண்டார்கள். அவர்கள் பேசும் மொழியாகிய தெலுங்கு அந்நாட்டிலே ஆட்சிமொழியாக விளங்குகிறது. சட்ட மன்றங்களிலும், வழக்கு மன்றங்களிலும், கல்விக் கழகங் களிலும், பிற எல்லாத் துறைகளிலுமே தெலுங்கு பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றது. ஆயினும் இங்கு ஒன்று கவனிக்க வேண்டும்; ஆந்திரநாடு முழுவதிலும் தெலுங்கு பேசும் மக்கள் மாத்திரம் இல்லை. தமிழ் பேசும் மக்களும் இருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகச் சித்தூர் முதலிய எல்லைப்பகுதிகளில் குடியிருக்கிறார்கள் இம்மாதிரி வேறு மொழி பேசும் மக்கள், நாட்டிற்குள் இருந்தாலும்கூட, தெலுங்கு மொழி ஆட்சிமொழியாய் நடைபெறுகின்றது. ஏனெனில் பெரும்பான்மையாகத் தெலுங்கு பேசும் ஆந்திரமக்களே ஆந்திர நாட்டில் வாழ்வதால், தெலுங்கு ஆட்சிமொழியாக இடம் பெற்றிருக்கின்றது.

ஆந்திரநாடு பிரிந்ததுபோக, இப்போது இருக்கும் சென்னை மாகாணம், பெரும்பான்மையும் தமிழ் பேசும தமிழ்மக்கள் கொண்ட நாடாக இருக்கிறது. 14-மாவட்டங்கள் கொண்ட இம்மாகாணததில் 12-மாவட்டங்கள் முழுவதும் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். சிறுபகுதியான "மலபார்" என்னும் பெயர்கொண்ட ஒரு மாவட்டததிலும், "கன்னடம்" என்னும் பெயர்கொண்ட மாவட்டத்திலுமே மலையாள மக்களும், கன்னட மக்களும வாழ்கிறார்கள். எவவாறு தமிழ்மக்கள் ஆந்திரநாட்டு எல்லைப பகுதியாகிய சித்தூர் மாவட்டததில் வாழ்கிறார்களோ, அதேபோல் இம்மலையாள மக்களும், கன்னட மக்களும, தமிழ் மாகாண எல்லைப்புறஙகளில் இருககிறாாகள.

இப்போது இம்மாநாட்டில் நாம் கேட்பது, "சென்னை மாகாணம பெரும்பான்மைப பகுதியில தமிழ் பேசும மக்களே இருக்கிறார்கள். ஏன் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யக்கூடாது? இதற்கு என்ன தடைகள்?" என்பதுதான்.

நம்மில் சிலர் சொல்லுவர்: "நாமெல்லாம் சட்டசபை களிலும் நீதிமன்றங்களிலும மற்ற நகராண்மை நாட்டாண்மைக் கழகங்களிலும் தமிழில்தானே பேசுகிறோம். இதற்கு யாரும தடை சொல்லவில்லையே? ஆகையால் இம்மாதிரியாகவே தமிழில் நடத்துவோம். பின், சட்டப்படி மொழிவாரி நாடுகள் பிரிக்கப் பட்டால் அநதநத நாடுகளில் அவ்வமமொழிகளை ஆட்சி மொழி யாய்ச் செய்துகொள்ளலாம் அபபோது வேறுமொழி பேசும மக்கள அந்நாட்டிடை இருந்தாலும அவாகளால் ஒருதடையும் ஏற்படாது; அப்படிச் செயவதுதானே நல்லது"

இநதப் பேச்சின் திறத்தை ஆராய்வோம்: தமிழ் மக்கள் இப்போது தமிழ்நாடு என்ற ஒரு நாட்டை வரையறுக்க வேண்டும் என்று கேட்கவில்லை. அதற்கெனச் சட்டம் செய்து ஆந்திரநாட்டைப்போல் ஒரு நாட்டை வகுத்துக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்கவில்லை. மேலும மொழிவாரியாக ஒரு நாட்டைப் பிரிதத பிறகுதான் ஒரு மொழியை அநநாட்டிற்கு ஆட்சிமொழியாகச் செய்விக்கவேண்டும் என்று, ஒரு சட்டமும் விதிக்கவில்லை. ஒரு நாட்டுப் பகுதியைத தனிநாடாக அமைக்க வேண்டுமென்றால் சட்டப்பிரிவுகள 2, 3-ன்படி நட ததவேண்டும். ஆகையால், நாடு பிரிக்கத் தனிச்சட்டம இருக்கிறது. அதே போல் நாடுமொழிகளை ஆட்சி மொழிகளாக ஆக்குவிக்க அதற்கெனத் தனிச்சட்டப் பிரிவுகள் இருககின்றன. இவை இரண்டிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இப்படியிருக்க, மொழிப்பேச் சோடு நாடு அமைக்கும பேச்சை இணைபபது, குழபபத்தை உண்டாக்குவதாகும்.

சென்னை மாகாணத்திலிருந்து பெரும்பான்மையும் தெலுங்கு பேசும் மாவட்டங்களைக்கொண்டு ஆந்திரநாடு அமைக்கப்பட்டது. அதேபோல இப்போது கன்னடம்பேசும் மக்களும் மலையாளம் பேசும் மக்களும் தங்களுக்கெனத் தனி நாடுகளை அமைத்துக்கொள்ள முயலுகிறார்கள். அவ்விதம் தனி நாடுகள் அமையும்போது, இப்போது சென்னை மாகாணத்திற்குள் சேர்க்கப்பட்டிருக்கும் மலையாளம் கன்னடம் ஆகிய மாவட்டங்கள் அவைகளோடு சேரும்.

அப்படியிருக்க இந்த மலையாள கன்னட மாவட்டங்கள், தற்காலிகமாய்ச் சென்னை மாகாணத்தின் எல்லைகளுள் இருப்பதின் காரணத்தாலே, கேரளநாடு கூடாது, கன்னட நாடு கூடாது என்று சொல்லவும் தடுக்கவும் முடியுமா? பெரும்பகுதி கொண்ட கேரள கன்னட நாடுகள் அமையும் வழியிலதானே இவைகளும் சேரவேண்டியது. அதேபோல சென்னை மாகாணத்தில் பெரும்பகுதிகொண்ட தமிழ் மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு, தாங்கள் வாழும் நிலப்பகுதியை, தமிழ்நாடு என்று பெயரிட்டுக்கொள்ளவும், தங்கள் மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்வித்துக்கொள்ளவும் உரிமையுண்டு. அவ்விதம் செய்வது கூடாது என்று, இச் சிறு பகுதி மாவட்டங்களிலிருக்கும் மலையாள மக்களும் கன்னட மக்களும் தடுக்க ஒருவித நியாயமும் சட்டமும் இல்லை. இதை அறிந்தே அம்மக்கள் ஒன்றும் பேசாது இருக்கிறார்கள். அப்படியிருக்க நாமாகவே, மலையாள கன்னடப் பகுதிகளைப்பற்றிப் பேசுவது, குட்டிக் கலகம் செய்வதுபோலாகும்.

மேலும் தமிழ்மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்விப்பது தமிழ் மாவட்டங்களுக்குள் மட்டும்தான். மற்ற மலையாள கன்னட மாவட்டங்களில் தமிழை ஆட்சிமொழியாகப் புகுத்த வில்லை. முன்போலவே அப்பகுதிகளில் அம்மொழிகள் வழங்கும். ஆங்கிலமொழி அரசுமொழியாய் இருக்கும். பின்னிட்டு மொழிவாரியாகத் தம் நாடுகளோடு சேரும்போது, தம் தாய் மொழிகள் ஆட்சி செய்யும். ஆகையால், இப்போதிருக்கும் சென்னை மாகாணத்தை ஒரு தனி மாகாணமாக்கச் சட்டம் செய்ய அவசியமில்லை. தனிமாகாணமாகவே இருக்கிறது. அதற்குத் தமிழே ஆட்சிமொழியாகும்.

வடதிசையிலிருந்து சில மிரட்டுப் பேச்சுக்கள் வருகின்றன. "ஆந்திரநாடு ஒன்றுதான் அமைத்தோம். வேறு தனி நாடுகளை அமைக்கமாட்டோம்; இன்னும் 10 ஆண்டுகள் கடக்க வேண்டும்" என்று சில அதிகாரிகள் பேசுகிறார்கள். ஆனால், அது

வரைக்கும் நாம் வாய் மூடிக்கொண்டு வாளா இருப்பதா? சட்டப்படி தமிழை ஆட்சிமொழியாய்ச் செய்விக்க உரிமை இருக்கும்போது, அவ்வுரிமையை, இன்னும் மலையாளநாடு, கன்னட நாடு அமைக்கவில்லை யென்று சொல்லிப் பறிக்கமுடியுமா? முடியாது.

தமிழை ஆட்சிமொழியாய்ச் செய்வித்தால் பணச் செலவு ஆகும் என்கிறார்கள். இஃதென்ன பேச்சு? தமிழர்கள் கொடுக்கும வரிப்பணம் தமிழர்களுக்குச் செலவு செய்யத்தானே இருக்கிறது. வீண்பேச்சுகள் பேசி மதிமயக்க வேண்டாம். நல்ல எண்ணத்தோடு தமிழை ஆட்சிமொழியாக்க எல்லோரும் ஒருமனபபடுவோம்.

இக் கருத்தைச் சட்டப்படி விளக்கஞ் செய்வோம். அரசியல் அமைப்புச் சட்டத்தில் (The Constitution of India) 8-வது அட்டவணையில் 14-மொழிகள் காணப்படுகின்றன. அவையாவன: அஸ்ஸாமிய, பெங்காலி, குசராத்தி, இந்தி, கன்னடம், காச்மீர், மலையாளம, மராததி, ஒரிசா, பஞ்சாபி, சான்ஃச்கிரிட், தமிழ், தெலுஙகு, உருது—இம்மொழிகள் நாட்டு மொழிகள என்றாவது அல்லது ஆட்சிமொழிகள் என்றாவது பெயர் கொடுக்கபபடாமல் பொதுவாக "மொழிகள்" என்ற பெயரளவில் குறிபபிடபபட்டு இருக்கின்றன.

மொழிகளைப் பற்றிய சட்டப்பிரிவுகள் 210, 343 முதல் 349 வரையாகும்.

இவைகளை ஆராய்வோம:

343-வது பிரிவுப்படி தேவநாகரி எழுத்துக்களைக் கொண்ட இந்தி மொழி ஒன்றே இந்தியப் பேரரசுக்குச (Indian Union) சட்டப்படி ஆட்சிமொழியாகச் செய்யப்பட்டிருக்கிறது. வேறு மொழிகளை இந்தியப பேரரசுக்கோ, அல்லது மாகாணங்களுக்கோ, ஆட்சிமொழிகளாகச் செய்யப்படவில்லை. மேலும் 343 பிரிவு விதிப்பது: "இந்தி ஆட்சி மொழியாய் இருப்பினும் இன்னும் 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமொழியே அரசியல் அலுவல்களுக்கு முன்போலப் பயன்படுத்தப்படும்." ஆகையால் ஆங்கில மொழி ஓர் ஆட்சி மொழி அன்று. அது ஒரு (authorised) தற்காலிக மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது; 15 ஆண்டுகளுக்குப் பின் அது நில்லாது நீங்கி விடும்.

இந்தி மொழியைப் பலவிதத்தானும் வளர்ப்பதற்கென 344-ம் பிரிவு சட்டம் வகுக்கிறது. அஃதாவது இந்தி மொழியை

மேன்மேலும் இந்தியப் பேரரசுக்கு ஆட்சி மொழியாய் இருக்க வேண்டி வளம்படுத்துவது. (a) ஆங்கில மொழியை அரசியல் ஆட்சியிலிருந்து எவ்வாறெல்லாம் குறைத்துக்கொள்வது. (b) உயர் நீதி மன்றங்களில் எந்த மொழியை, 348-வது பிரிவுப்படி கையாள வேண்டுவது. (c) பேரரசுக்கும் ஒரு மாகாணத்திற்கும் இடையேயும், ஒரு மாகாணத்துக்கும் மற்றொரு மாகாணத்திற்கும் இடையேயும் எந்த மொழியைத் தொடர்பு மொழியாக (for communication) ஆக்க வேண்டியது,—இவை எல்லாம் ஆராய்ச்சி செய்ய ஒரு மொழிவாரிக் கமிசனும் அதன் சிபார்சுகளை ஊன்றி ஆராய்ந்து சனாதிபதியிடம் அறிக்கை (report) செய்ய ஒரு பார்லிமெண்ட் கமிட்டியும் அமைக்கச் சட்டம் செய்திருக்கிறது. ஆனால், நாட்டுமொழிகளை வளர்க்கவோ அல்லது காக்கவோ ஒரு சட்டமும் செய்யப்படாம லிருக்கிறது.

இவ்வாறு இந்தி மொழிக்கும் தேவநாகரி எழுத்துக்கும் 343, 344, பிரிவுகள் சட்டம் செய்திருக்க, ஏனைய 12 மொழிகளுக்குப் பிரிவுசட்டங்கள் 210, 345, 346, 347, 348 என்ன விதிக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

பிரிவுச் சட்டம் 210 சொல்லுவது : ஒரு நாட்டுச் சட்டசபையின் நடைமுறை வேலைகள (Business in the Legislature of the State) அந்நாட்டின் ஆட்சிமொழியிலாவது (official language) அல்லது இந்தி மொழியிலாவது அல்லது ஆங்கில மொழியிலாவது நடைபெறும். இம் மொழிகளில் விளக்கமாகப் பேச இயலாத சட்டசபை அங்கத்தினர், சபாநாயகரின் அனுமதி பெற்றுத் தம்தம் தாய்மொழியில் பேசலாம்.

இப்போது நமது சட்டசபையைக் கவனிப்போம். அங்கே ஆங்கிலத்தில்தான் நடைமுறைகள (Business in the Legislature) அச்சிடப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் பேசுவது ஆங்கிலமொழியில்தான். ஏனைச் சட்டசபையினர் ஆங்கிலத்திலும், தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் பேசுகிறார்கள். நாம் முதலாவதாகக் கேட்கலாம். அச்சிட்டு வழங்கும நடைமுறைகளைத் தமிழில் அச்சிட்டு வழங்குவார்களா ? தமிழில் அச்சிட்டால் மற்ற மொழிகளிலும் கேட்போருக்கு அச்சிட்டு வழங்கவேண்டி வருமே என்று சிலர் உரைப்பார்கள். ஆனால், தமிழ்மொழி ஆட்சிமொழியாய்ச் செய்வித்திருந்தால் இந்த வினாவே எழாது. ஆங்கிலமொழி அரசு மொழியாய் (Authorised) விதிக்கப்பட்டு இருப்பதால்தான் ஆங்கிலத்தில் அச்சிடப்படுகிறது. தமிழ் ஆட்சிமொழியாய்ச் செய்விக்காத காரணத்தால் அது தமிழில் அச்சிடப்படவில்லை.

210 பிரிவின்படி 2-வது உட்பிரிவு சொல்வதாவது : "ஒரு நாட்டுச் சட்டசபை ஆங்கிலமொழியை நீட்டிக்காது விட்டுவிட்டால், 15 ஆண்டுகளுக்கு இறுதியில் ஆங்கிலமொழி மாண்டதாகக் கருதப்படும்" ஆகையால் இச்சட்டப்படி ஆங்கிலத்திற்கு ஒரு காலவரையறை உண்டு. இதற்குப் பிறகு இந்தி மொழி நாட்டுக்குள் முதல்இடம் பெறும். ஏனெனில் இப்போதுள்ள சட்டப்படி நம் நாட்டில் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யாது இருப்பதால்.

345 பிரிவு சொல்லுவது என்னவென்றால்—ஒரு நாட்டின் சட்டசபை நாட்டில் இயங்கும் ஒரு மொழியினையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ, அல்லது இந்தி மொழியையோ, சட்டம் செய்து ஆட்சி மொழியாக அமைத்துக் கொள்ளலாம். இப்பிரிவு முக்கியமானதால் ஆங்கிலத்திலும் படிக்கிறேன் :

Subject to the provisions of Articles 346 and 347, the Legislature of a State may by law adopt any one or more of the languages in use in the State or Hindi, as the language or languages to be used for all or any of the official purposes of that State ஆகையால், உடனடியாகத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக இச் சட்டப்பிரிவின்படி அமைக்கவேண்டும்.

மேலும் 345 பிரிவு கூறுவதாவது—ஒரு நாடு தன் மொழியை ஆட்சிமொழியாக அமைத்துக்கொள்ளாவிட்டால் முன் இருந்தவாறே ஆங்கிலமொழி அரசியல் நடவடிக்கைகளுக்காக (for all official purposes)த் தொடர்ந்திருக்கும்— ஆகையால் நம் நாட்டில் அரசுமொழியாக இருப்பது ஆங்கிலமொழி ஒன்றுதான். 346 பிரிவு விதிப்பதாவது—இந்தியப் பேரரசுக்கும் ஒரு நாட்டுக்கும் இடையேயும், ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையேயும் எந்த மொழியைப் பேரரசு அரசு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதோ, அந்த மொழி தான் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படும். ஆகையால், இந்தச் சட்டப்படிக்கும் இந்தியா முழுதும் ஆங்கிலமொழிதான் அரசு மொழியாக இருக்கிறது.

345-வது பிரிவுப்படி தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்யாது, பின்னிட்டு இந்தி மொழியும் ஆட்சிமொழியாக அமர்ந்துவிட்டால் என்னவாகும்? — அப்போது தமிழுக்கு முதல் இடம் இல்லாமல் போய்விடும். இதைப்பற்றி 347 பிரிவுச் சட்டம் சொல்லுவது : "உங்கள் நாட்டிலே பெரும்பான்மை

பான மக்கள் பேசும் ஒரு மொழியினை, அந்நாட்டிலே ஏற்றுக் கொள்ளவேண்டும் (recognise) என்று ஒருமுகமாகக் (demand) கேட்டால், அப்போது இந்தியப் பேரரசின் சனாதிபதி மனமிசைந்தால், அந்த மொழியும் நாட்டு வேலைக்காகக் குறிப்பிட்ட அளவுக்கு இருக்கட்டும் (shall also be officially recognised) என்று (direct) கட்டளையிடுவார். 345 பிரிவுப்படி ஆண்டவன் கொடுத்த கைகளாலேயே நாமே சட்டம் செய்ய வகையிருக்க, அது செய்யாது சோம்பிக்கிடந்து, பின் 347 பிரிவைக் காட்டி மொழிக்கெனப் பலலேக்காட்டிப், பிச்சை கேட்கக் கையேந்துவது என்ன பேதைமையாகும். ஆகையால் நாம் எச்சரிக்கையாயிருந்து, உடனடியாகத் தமிழ்மொழியை ஆட்சிமொழியாகச் செய்விக்கவேண்டும்—இல்லாவிடில் தமிழ் நாட்டின்கண் தமிழ் மொழி முதல இடம பெறாது குன்றிவிடும்.

முன்பாகத்தில் விளக்கினபடி இந்திமொழி ஆட்சிமொழியாகிச் சட்டமன்றங்களிலும வழக்குமன்றங்களிலும் புகும். "சட்டமன்றங்களில் தமிழ தானே வழங்குகிறது" என்று சிலர் சொல்வார்கள. ஆனால், தமிழ் வழங்குவதினாலேயே அது ஆட்சிமொழி ஆகிவிடாது ஏனெனில், 348 பிரிவு இதைப் பற்றிச் சட்டம சொல்வதாவது :

(1) பார்லிமெண்ட் சட்டம் இயற்றும் வரைக்கும் (a) தீர்ப்புகள் (Judgements) டிக்ரிகள் (Decrees) (b) இதர உத்தரவுகள (Orders) இவையெல்லாம் ஆங்கில மொழியிலேயே இருக்கும.

(2) உயர் நீதிமன்றங்களில் (Supreme Court and every High Court) நடைபெறும் நடவடிக்கைகள் (proceedings), மற்றைய நூல்கள் (Texts), சட்டங்கள் (Bills), விதிகள் (Acts, Rules, Regulations) முதலியவை ஆங்கிலமொழியில் நடைபெறும்.

(3) ஆனால், இந்தியப் பேரரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று, அந்நாட்டரசுத தலைவர் (Governor) அவர்கள் மேற்கண்ட நடவடிக்கைகள்—சட்டங்கள் இவைகளை இந்திமொழியிலாவது, அல்லது அந்நாட்டின் ஆட்சிமொழியிலாவது, நடைபெற உத்தரவு செய்யலாம். ஆகையால் உயர்நீதி மன்றங்களில் நாம், நம்மொழியிலே மன்றாடவேண்டுமென்றால், முதலடியாக நம் தமிழ்மொழியை ஆட்சிமொழியாக, 345 பிரிவுச் சட்டப்படி செய்யவேண்டும். அப்படிச் செய்யாதவரைக்கும் ஆங்கிலமே உயர்நீதிமன்றங்களில் நடைபெறும். ஆங்கிலத்தை விடுத்து இந்திமொழியை, உயர்நீதிமன்றங்களில் வைக்க,

348 (2) உட்பிரிவு, சனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது. நாட்டின் சட்டசபைகளைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்றில்லை. ஆகையால் தமிழ்மொழி உயர்நீதி மன்றங்களில் வழங்கவேண்டுமானால் முன்னடியாகவே ஆட்சி மொழியாகச் செய்வித்தல் வேண்டும்.

இவ்வாறு சட்டமன்றங்களிலும், உயர்நீதிமன்றங்களிலும், தமிழ்மொழியை ஆட்சிமொழியாய்ச் செய்விக்கவேண்டிய பொறுப்பு யாருடையது? எல்லாப் பொறுப்பும் நமது சட்டசபைகள்மீதும், சட்டசபை உறுப்பினர்கள்மீதும் சார்ந்திருக்கின்றது. அவர்கள் செய்தக்கது செய்யாது சோம்பிக்கிடந்தால் என்னவாகும்?

> "மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்கு
> அடிமை புகுத்தி விடும்"

என்னும் திருவள்ளுவநாயனார் திருமொழியும் நன்குணர்க.

இம்மாநாட்டில், தெரிந்த இனம் எல்லாம் கூடி இருக்கிறது. நாட்டுக்குப் பலதுறைகளிலும் பாடுபட்ட நன்மக்கள் கூடியிருக்கிறார்கள். நாட்டு நிலமக்களுக்கெல்லாம், தலைமக்கள்போன்ற சட்டசபை உறுப்பினர்கள் இங்கு இணைந்திருக்கிறார்கள். நல்லவை எல்லாம் கடன் என்ப என்று சான்றாண்மை மேற்கொண்ட பெரியார் பலர் பரிவுடன் இங்கு இருக்கிறார்கள். தமிழே தாயுருவாயமைந்த தாய்மார்கள் இங்குத் திகழ்கின்றார்கள். இவ்வாறு நற்குணத்தாலும் நல்லறிவாலும் நிரம்பப்பெற்ற மக்கள்முன் யான் உரை ஆற்றுவது,

> "உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
> பாத்தியுள் நீர்சொரிந் தற்று."

நாமெல்லாம் ஒத்த மனத்தோடு தமிழ்ப்பணியாம் தெய்வப் பணியை ஆற்றுவோம்.

நமது "தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்" சட்டசபைகளில் நிறைவேறுவதற்கு எல்லாச் சட்டசபை உறுப்பினர்களின் உதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். சிறப்பாக நம் முதல் அமைச்சர் உயர்திருவாளர், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேருதவி நிரம்பவும் வேண்டும். நம் தமிழ்நாட்டில் பிறந்து முதல் மகனாக ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். தமிழ்மொழியிடத்தில் பேரன்புகொண்டவர். திருக்குறள் முதலிய தமிழ்நூல்களைப் படித்து மதிநுட்பம் வாய்ந்தவர். எவ்வது உறைவது உலகம் என்று அறிந்து உலகத்தோடு அவ்வது உறையும் அனுபவமும் பெற்றவர்.

இப்பேரறிவும் பேராற்றலும் கொண்டு ஆந்திரநாட்டை அமைத்துக்கொடுத்த நம் இராசகோபாலாச்சாரியார் அவர்கள், உடனடியாகச் சென்னை மாகாணத்தில் தமிழ்மொழியை ஆட்சி மொழியாய்ச் செய்விக்க எல்லா உதவியும் செய்யவேண்டு மென்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்."

உலகுக்கு ஒருவன்தான் முதல்வன் என்னும் மெய்யுணர்வை உணர்த்திய திருவள்ளுவர் சிறப்பாக மொழியைத்தான் உவமை யாகக் கையாளுகிறார். எப்படி, எல்லா (தமிழ்) எழுத்துக் களின் ஒலிக்கும் வடிவத்திற்கும், முதலெழுத்தாகிய அகரம் காரணமாயிருக்கிறதோ, அதேபோல நாம் ஞானம் பெறவும், கல்வியைக் கசடறக் கற்கவும், கற்றவழி நிற்கவும், எல்லாத் துறைகளிலும் கல்வி கற்று ஊதியம் பெற்று நலமெல்லாம் அடைந்து நல்வாழ்வு வாழவும் உதவி அளிப்பது நமது தமிழ் மொழியே ஆகும்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

தமிழ்மொழியை ஆட்சிமொழி ஆக்குவோம்.

"தமிழ் வாழ்க!"

பல கட்சித்தலைவர்களின் கருத்துரைகள்

தலைவரவர்களின் தலைமைச் சொற்பொழிவுக்குப்பின் பல கட்சித் தலைவர்களும் தமிழ்மொழி ஆட்சி மொழியாகவேண்டிய தின் இன்றியமையாமையைப்பற்றித் தக்க அகச்சான்று புறச் சான்றுகளுடன் சொற்பொழிவாற்றினார்கள்.

கே. விநாயகம், எம். எல். ஏ.

"நமது ஆட்சிமொழி எம்மொழியாக இருக்கவேண்டு மென்பதை முடிவுசெய்ய நாம் இங்கே கூடியிருக்கிறோம். நாமெல்லாம் தமிழர் என்ற நிலையில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. நாம் நான்குமொழிகள் பேசும் தென்னாட்டினர் என்பதில் வேறுபாடில்லை. நான்குமொழி பேசுபவர்களுள் ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள். பொட்டி ஸ்ரீராமுலு இறந்தார். அவர்கள் தனிநாட்டை அமைத்துக்கொண்டார்கள். தமிழர்கள் முயற்சிக்கவில்லை. ஆந்திரம் பிரியும்; மலையாளம் மறையும்; கன்னடம் கலையும்; பிறகு எஞ்சியது தமிழகம்.

வேங்கடத்தை வடவெல்லையாகக்கொண்டு பாரதியார், பாரதி தாசன் பாடுகிறார். தமிழ் ஆட்சி, தமிழர் ஆட்சி ஏற்பட இயக்கம் துவக்கப்பட்டால் அதற்கு முதல் பலியாக நான் தயார்."

ப. சிவானந்தம், எம். எல். ஏ.

"பொதுவுடைமைக் கட்சிச்சார்பில் சென்னை சட்ட அவையில் தமிழ்ஆட்சிமொழித் தீர்மானத்தில் முதல் வரிசை யில இருப்போம். உறுதியாக ஒன்றுபட்டிருக்க நாங்கள் தயாராக இருக்கிறோம. இம் மாநாட்டில் மாறுபட்ட கட்சிக் காரர் பேசினாலும் நம் எண்ணம தமிழ் ஆட்சி ஏற்படுவதிலேயே இருத்தல்வேண்டும். உண்மையிலேயே ஒரு ஆட்சி மக்களாட்சி யாக இருக்கவேண்டுமானால், அநத அநத நாட்டு மக்களின்மொழி எல்லாததுறைகளிலும் பயன்படவேண்டும். தமிழக மக்கள் அனைவரையும் ஒன்றுபடத திரட்டத்தக்கவகையில நம கருத் துக்கள அமையவேண்டும். எந்த ஒரு சாராரும் தங்களது கருத்துக்களைப் பிறர்மீது திணிக்க முயன்றால் முடியாது. சன நாயகக் கொள்கை நிலைக்க மொழிவழி அரசியல் ஏறபட்டாக வேண்டும்."

கே. சாம்பசிவ ரெட்டியார், எம். எல். ஏ.

"வீட்டில் பேசும் மொழியே நாட்டு ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்றே எங்களில் சிலர் கருதுகிறோம். காங் கிரஸ் கட்சியைச்சார்நத சட்ட அவை உறுப்பினரில பெரும் பாலோர் கருத்தும இதுவே. நாம் எதிர்காலததில் பொலிவுடன் திகழவேண்டுமானால் தமிழ்ப் பெரியார் திரு. வி க. அறிவுரைப் படி கருததுவேற்றுமைக்கு இடந்தந்து நடக்கவேணடும். ஆனால், தமிழ்மொழி தமிழ்நாட்டு ஆட்சிமொழியாக இருப்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கவே முடியாது."

ஏ. கோவிந்தசாமி நாயகர், எம். எல். ஏ.

"மொழியின் அடிப்படையிலேயே நாம் யாவரும் இங்குக் கூடியிருக்கிறோம். காங்கிரஸ் தோழர்கள் ஒத்துழைத்தால் சட்ட அவையிலே இத்தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாம். எல்லாக் கட்சிகளையும் ஒன்றுசேர்க்கும பெருமை தமிழ் மொழிக்குத்தான் உண்டு. இக் கூட்டுமுயற்சி தமிழ் ஆட்சி மொழியாகும் என்பதறகு அறிகுறி சட்ட மன்றத்தில் மட்டும் தமிழ் பேசப்பட்டால் போதாது. நீதிமன்றம், சர்க்கார் அலுவ லகங்கள் அனைத்திலும் தமிழ் ஆட்சி நடைபெறவேண்டும். இரயில் நிலையங்களில் இந்தி ஆதிக்கம் ஒழிந்து தமிழ்மொழிக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும்."

ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி ஏ., எல்.டி.

“தாய்மொழி ஒரு நாட்டில் புறக்கணிக்கப்பட்டால் அந் நாட்டு மககள பிற நாட்டு மக்களால் மிகவும் இழிவாகக் கருதப் படுவாாகள். பலலவர் காலத்திலும் அதற்கு முன்பும் தமிழ் ஆட்சிமொழியாக இருநதது. அதற்குபபின் தமிழ் ஆட்சி படிப்படியாகக் குறைந்துவிட்டது. தமிழ்மொழியில் ஆட்சி நடந்தால்தான் எலலோருக்கும் தெரியும. குழப்பமும் இருக் காது. நான் முழுமனதுடன் இமமுயற்சியை வரவேற்கிறேன்.”

பி. இராமமூர்த்தி, எம் எல்.ஏ

“தமிழ்மொழியை அரசியல்மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்க இமமாநாடு கூட்டப்பட்டது. ஏன் இவ் வாறு கேட்கிறோம்? உண்மையாகவே சனநாயகம் நிலவ வேண்டுமானால், அந்த அந்த நாட்டு மக்கள் பேசும் மொழியி லேயே அவ்வந்நாட்டு ஆட்சி நடைபெறவேண்டும். சட்ட அவையில் ஆங்கிலம் தெரிநதவர் சிலர். தெரியாதவர் பலர். சட்ட அவையில நடைபெறுவதை நன்கு ஆராய்ந்து உண்மை தெளியத் தமிழில் ஆட்சி நடைபெறல வேண்டும். இல்லை யெனில் சட்ட அவை உறுப்பினர் கைகாட்டிப் பொம்மை களாகவே இருப்பர். உருஷ்யப் பிரதிநிதியாகிய விஷின்ஸ்கிக்கு ஆங்கிலம் தெரிநதிருந்தபோதிலும, ஐக்கியநாட்டு மன்றத்தில் உருஷிய மொழியிலேயே பேசுகிறார் இது அவர்கள் தாய் மொழிபபற்றை விளக்குகிறதல்லவா? நம நாட்டில் பல்வேறு பகுதியிலுள்ள மக்கள் என்னென்ன மொழிகளில் ஆட்சி நடை பெற வேண்டுமென்று சொல்கிறார்களோ, அதே மொழியே சடட அவையிலும் பேசப்படவேண்டும். ஆங்கிலம் தமிழ் வளர்ச்சியைத் தடை செய்தது பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் நம் நாட்டில் தமிழிலேயே ஆட்சி நடைபெறல்வேண்டும். ‘ஆங்கிலம பண்பட்டது, கலைகள் கொண்டது; தமிழில் இவை களைக் கொண்டுவருவது எப்படி இயலுமா?’ எனபர் சிலர். தமிழுக்குச் சூழ்நிலை அளித்தால் புதுப்புதுக் கலைச்சொற்கள் நமமொழியிலும உண்டாகும். நீந்தப்பழகுகிறவன் தண்ணீரில் குதித்தால்தான் நீந்தமுடியும். அதேபோல் தமிழில் ஆட்சி செம் மையாக, புதுப்புதுக் கலைச்சொற்களுடன் நிலவ அம்மொழிக் குச் சூழ்நிலை அளித்தே தீரவேண்டும். ஆட்சிமொழியாகத் தமிழ் ஆக்கப்படுமானால் இம்மொழி முன்னிலும் செழித்து வளரும்.

இளவழகனார்

“நம்மை நாடுகடத்திவிட்டாலும், நம்மோடு வருவது நம் தாய்மொழி. நம்மை எங்கு கொண்டுபோய்விட்டாலும்;

நம்மைவிட்டுப் பிரியாமலிருப்பது நம் தாய்மொழி. அது நம்மைவிட்டுப் பிரியக்கூடாது. சில நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழி ஆட்சியில் இல்லை. தமிழ் ஆட்சிமொழியாகுமானல் தமிழ்மொழி சிறந்து விளங்கும். அப்பொழுதுதான் தாய்நாடு விடுதலையானதற்கு ஒப்பாகும். நமக்கு இருக்கும் பெருமையெலாம் நம்முன்னேர்கள் ஆக்கிவைத்த அருந்தமிழ்க் களஞ்சியங்களாலேதான். கருத்து வேறுபாடின்றி ஊக்கம், ஒற்றுமை, தியாகம், பெருந்தன்மை முதலிய உயரிய பண்புகளுடன் நாம் ஒத்துழைக்கவேண்டும். எல்லோரும் ஒத்துழைப்பார்களாக. மொழி தலைமை பெற்றால்தான் நாட்டின் தலைமை நன்ருக நமக்குக் கிடைக்கும்.”

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

“மாநாட்டின் நோக்கம் எழுத்துருவத்தில் உருவாக்கப் படுகிறது. தகுந்த இடத்தில், தக்க காலததில், பல கட்சித் தலைவர்களும் பேசியிருக்கிருர்கள். பல சாதியினர், கட்சியினர், சமயத்தினர் அனைவரும் தமிழர்களாக இங்குக் கூடியிருக்கிறேம்,” என்று குறிப்பிட்டுத் தீர்மானத்தைப் படிக்கலானர். தீர்மானம் வருமாறு :

> ‘மக்கள் ஆட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப, மாநில ஆட்சி திறமையாக நடைபெற, அந்தந்த மாநிலப் பெரும்பான்மை மக்களின் மொழியிலேயே ஆட்சி நடைபெறவேண்டும என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.
>
> எனவே, இனியும் காலந்தாழ்த்தாது சென்னை நாட்டரசின் சட்டமன்றம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 345-வது பிரிவின்படி நாட்டரசின் துறைகள் எல்லாவற்றிலும் தமிழ்மொழியே ஆட்சி மொழியாக இருத்தல்வேண்டும் என்று சட்டம் இயற்றுமாறு இம்மாநாடு வலியுறுத்துகின்றது.
>
> அதுபற்றிச் சென்னை நாட்டரசின் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பெறும் தமிழ் ஆட்சிமொழி மசோதாவை இம்மாநாடு பாராட்டுவதோடு அதை நிறைவேற்றி வைக்கும்படி சட்டமன்றத்தினரைக் கேட்டுக்கொள்கிறது.’

தீர்மானத்தை ஒட்டிப் பின்னர்ப் பேசியதாவது: “இத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துள்ளவர்கள் இம்மண்டபத்தில் இல்லை ; தமிழ்நாட்டிலுமில்லை. இருந்தால் அவர்கள் தமிழரல்

லர் என்பது தமிழறிஞர்கள் கருத்து. இப்படித் தமிழர் தம் உரிமையைக் கேட்கவும், கைக்கொள்ளவும் சட்டம் இடந்தருகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் இத்தீர்மானம் கொண்டுவரப்படுகிறது. அரசியல் அமைப்புச் சட்டம் 210-பிரிவுகள் 1, 2, 3-ம் நம் தீர்மானத்திற்குத் துணைசெய்கின்றன. சட்டங்கள் அமைக்கப்பட்டு ஐந்தாண்டுகளாகிவிட்டன. உரிமை வந்து, இன்னும் நமக்கென ஒரு மொழியை ஆட்சிமொழியாகக் கொள்ளவில்லை. தமிழன் சுருக்கிட்டுத் தொங்கக்கூடிய நிலையில் இருக்கின்றான். இந்நிலை மாறவேண்டும். காலும் போயிற்று, தலையும் போயிற்று; வலதுகை இடதுகை எல்லாம் வெட்டப்பட்டுத் தமிழ்நாடு முண்டமாக இருக்கிறது. தமிழ்நாட்டில், நாஞ்சில் நாட்டில் தமிழ் படிக்கத் தமிழர்க்கு உரிமையில்லை; மலையாளம் படிக்கக் கட்டாயப்படுத்தபபடுகிறார்கள். கேட்க நாதியில்லை; வடக்கே ஆந்திரம்; மேற்கே கன்னடம்; கிழக்கே பிரெஞ்சு; தெற்கே மலையாளம் கட்டாயப்படுத்தப்படுகின்றன. கேட்க நாதியில்லை. சேர சோழ பாண்டியர் ஆட்சிக்காலததில் நிலவிவந்த வணக்கம் என்ற தமிழ்ச்சொல் பல்லவர் காலத்தில் நமஸ்காரம், நமஸ்தே ஆயிறறு. பின்னர் நாயக்கர் ஆட்சி வந்தபோது நமஸ்காரம் போய் தாசானுதாசண்டி என்றாயிற்று. பின்னர் நவாப ஆட்சிக் காலத்தில சலாம் ஆயிறறு. எவன் ஆண்டாலும் அவன் மொழியில் ஒரு கும்பிடு போடுவது நம்மவர்க்கு வழக்கமாகிவிட்டது. வெள்ளையன் ஆட்சியிலே 'குட்மார்னிங' ஆயிற்று. வடநாட்டார் ஆட்சி வநது 'ஜேய் ஹிந்த்!' ஆயிற்று. இது தவறு; இந்நிலை மாறவேண்டும்.

2000 ஆண்டுகளாக ஆரியரோடு போராட்டம்; 600 ஆண்டுகளாக உருதுப்போராட்டம; 150 ஆண்டுகளாக ஆங்கிலத்தோடு போராட்டம; இபபோது இந்தியோடு போராட்டம். தமிழன் தன் நாட்டைத தன்மொழியால் ஆளவேண்டும் என்பதற்கு இப்படி மாநாடு கூட்டுவதுபோல் உலகிலேயே காணமுடியாது; இது நமக்கு மானக்கேடு அல்லவா? தமிழன் இப்பொழுதுதான் வலது காலை எடுத்து வைக்கத் துணிந்திருக்கிறான். சாதி சமயக் கட்சிகளால் பிளவுபடாமல் இதற்கு நாம் ஒன்றுபடவேண்டும். எல்லாக் கட்சிகளுககும உலக முழுவதும் கிளைகளுண்டு. தமிழ்நாட்டில் தமிழ்க்கட்சி என ஒன்றுளது; அதற்குப் பிற நாட்டில் அவ்வாறு கிளைகளும் இல்லை. "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்று சொல்லித் தமிழர் பரந்த நோக்கத்துடன் இருக்கின்றனர். அனைவரையும் கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன், பெற்றநாட்டையும், வளர்த்த மொழியையும் வலுப்

படுத்திகொண்டு உலகமெலாம் ஒன்று என்று சொல். மொழி அடிப்படையில்தான் நாம் ஒன்று சேர முடியும். இழந்துபோன உரிமைகளை எல்லாம் தமிழன் பெற்று வாழவேண்டும். அசோகன் ஆண்ட காலத்திலும, அம்மன்னன் சக்கரபொறி தமிழ்நாட்டில் பதிக்கப்படமுடியவில்லை. 3000 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு நாட்டை ஆண்டவன் தமிழன். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூதத குடி நம் குடி. நாம் ஒன்றுபடக் கட்சி, மதம், சாதி நமக்குத துணைசெய்யாது; மொழிதான் துணை செய்யும். சட்டஅவையில் இத்தீர்மானம் நிறைவேறத் துணை செய்யுமாறு யாவரையும் நான் கோரு கிறேன்.

கவிஞர் கா. மு. ஷெரீப்

திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை, அடுத்துப் பேசிய கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் ஆதரித்துப் பேசினர். அவர்கள் பேசியதின் சுருக்கம வருமாறு :

“ தீர்மானத்தை ஏன் ஆதரிக்கின்றேன்? தமிழரசுக் கழகக் கொள்கைகளில் ஒன்று, தமிழ்மொழி ஆட்சிமொழியாக ஆக்கப் படவேண்டுமென்பதாகும். சட்டஅவை உறுப்பினர்களை நாம் அணுகி அவர்கள் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். தமிழ் ஆட்சிமொழியாகிவிட்டால் ஆங்கிலததை எண்ணிக்கொண்டு இருப்பவாகளின் கதி என்ன என்று எதிர்ப்பார்கள் தமிழரசுக் கழகச் சார்பில் நான் இத்தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக் கின்றேன். கூட்டம் கூட்டி மாநாடு நடததிப் போராட்டங்கள் செய்து ஒத்துழைக்கிறோம் என்று தமிழரசுக் கழகச் சார்பில் நான் கூறுகிறேன்.”

க. அன்பழகன், எம். ஏ.

“ தாய்மொழி எந்நாட்டில் ஆட்சிமொழியாக இருக்கிறதோ அந்நாட்டு ஆட்சிதான் நல்லாட்சியாக இருக்கமுடியும் ‘இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?’ என்ற பழமொழி எப்படியோ நமக்கிடையே முளைத்துவிட்டது. இப்பழமொழியால் தமிழுக்கு இழுககேயாகும். தமிழுக்கு ஆற்றல் இல்லையா? வன்மை இல்லையா? தமிழுக்கு வன்மை இருந்த காரணத்தினலேதான் இன்றளவும் தமிழர் வாழ் கிறார்கள். தமிழர்க்கு உணர்ச்சி, வரலாற்று அறிவு, நம்பிக்கை முதலியவை தேவைப்படுகின்றன. ஆட்சிபபீடத்திலுள்ளவர்கள் நல்ல தமிழர்களாக இருப்பார்களேயானல், ‘வாழிய செந்தமிழ்,

வாழ்க நற்றமிழர்' என்ற பாரதியாரின் பாட்டுக்கு ஏற்பத் தமிழை ஆட்சிமொழியாக ஆக்கியிருப்பார்கள். ஆலயம், வீடு, வழக்குமன்றம், சட்ட அவை முதலிய இடங்களில் வேற்று மொழிகள் நிலவுகின்றன. ஆந்திரா இன்று நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாலும் அவர்கள் மொழியாகிய ஆந்திரம் தமிழிலிருந்து தோன்றியதே.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பெருமக்கள் வட மொழியின் பெருமையையும, கீதையின் பெருமையையும்பற்றிப் பேசுகிறார்களே யொழியத் தமிழிலுள்ள செல்வக் களஞ்சியங் களைப்பற்றிப் பேசுவதில்லை. கீதையை மொழிபெயர்கக முன் வந்தார்களேயொழியத் திருக்குறளை மொழிபெயர்க்க யாரும் முன்வரவில்லை. தமிழ்மொழியிலுளள திருக்குறளை, மேனாட் டிலிருந்து எவரேனும் வநது அதைப படித்து, மொழிபெயர்த் தாலொழிய அதன் பெருமையை உலகில் விளக்க எவரும் இல்லை. நாதியற்ற நிலைமைக்கு நாம் ஆளாகி இருக்கிறோம். அதை அகற்றவேண்டும் மலையாளத்தார், தெலுங்கர், கன்ன டர் முதலியவர்கள் தம தம் தாய்மொழி தமிழிலிருநது தோன் றியது எனறு சொல்லவைக்கவேண்டும். அபபோதுதான் தமிழ் உயரும்; இல்லையெனில, தமிழர் நிலை சீரகேடாகும்.

தமிழை விரட்டியவா யார்? தமிழ் நாட்டிலே வாழ்ந்து கொண்டு இநதியை, சமக்கிருததததைப் போற்றுபவர் துரோகி கள். தமிழ்மொழி ஆட்சிமொழி ஆக்கப்பட்டால் தமிழா நிலை உயருமை இமயவரமபன் நெடுஞ்சேரலாதன், ஆரியப்படை கடநத நெடுஞ்செழியன் முதலிய காரணப்பெயர்கள் நம் நாட்டை ஆண்ட மன்னாகளின் பெயர்கள். சட்டமன்றத்திலுள்ள வர்கள் நல்ல தமிழர்களானல் தமிழ்மொழியை ஆட்சிமொழி யாக ஆககியே தீரவேண்டும். இத தீர்மானத்தை நிறைவேற் றாத சட்டஅவை உறுப்பினர்கள் மீண்டும் சட்ட அவைக்குள் போகமுடியாது."

நடிகர். டி. கே. சண்முகம்

"சட்ட அவையில் உண்மையில் தமிழர் யார்? தமிழரல்லா தார் யார்? என்பதைக் கண்டுபிடிக்க இத்தீர்மானம பெரிதும் பயன்படும. நாடக, திரைப்பட நடிகர்கள் சார்பாக இத் தீர்மானத்தை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்."

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, எம்.ஏ , எல்.டி.

"இம் மாநாட்டில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். நான் இந்நாட்டில் இருக்கிற எல்லாக் கட்சி

களிலும் இருந்திருக்கிறேன். எல்லாக் கட்சிகளிலிருந்தும் நான் கண்ட கனவு இன்று நிறைவேறியுள்ளது. தமிழரின் அடிப்படை உரிமைக்காக வாதாடும் மாநாடு இது. இந்த அடிப் படை உரிமையின் குறுக்கே எவராவது நின்றால், அவர்களை இன்று நாம தமிழரென்று கருதமாட்டோம். தமிழகத்தின் பகைவர் என்றே கருதுவோம். வருங்கால வரலாறு அவர்களை மனித இனத்தின் எதிரி என்றே காட்டும தமிழின் நிலையை உயர்த்த நாம் எவ்வளவோ செய்யவேண்டும் என்னென்ன செய்வது என்பதில் கருத்து வேற்றுமை இருக்கலாம். தமிழ் அரசியல் மொழி ஆவது இவ் வெல்லாவற்றுக்கும் அடிப்படை யான முதற்படி. தமிழ அரசியல்மொழி ஆனல் தமிழ் வாழும்; வளரும். இதில் எல்லோரும் ஒன்றுபடுவோம். அதன்பின் மற்றப் படிகள் தோன்றும். உலகக் கட்சிகள் அனைத்திற்கும் தமிழகத்தில் இடமுண்டு. ஆனல் தமிழகத்துக்கு உலகத்தில் இடமில்லாமலிருக்கிறது. இது ஏன்? தமிழ்ப் பண்பு தமிழகத் தில் வாழ்ந்தால் தமிழர் தம் மொழியில்மட்டுமன்றி கலை, இலக் கியம், சமயம் ஆகிய எல்லாத துறைகளிலும வளர்ச்சி பெறு வார்கள்.”

மயிலை சிவ முத்து. தலைவர், சென்னைத் தமிழாசிரியர் கழகம்

“பல அறிஞர்கள் பேசியபின்னர், தமிழாசிரியனாகிய நானு எதிர்க்கப்போகிறேன்? உரிமை ஆட்சியை ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் பெற்றோம். மொழி ஆட்சி அவ்வளவு இல்லாமல் முடியுமா? இப் போராட்டத்திற்கு நாம் தயங்கக்கூடாது. சென்னைத் தமிழாசிரியர் கழகசசார்பில் இத் தீர்மானத்தை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.”

சீவா - நாரண துரைக்கண்ணன்

“தமிழ் நாட்டில் தமிழ்மொழி ஆட்சிமொழியாக வேண்டு மென்று கனவுகண்டவர்களுள் நானும ஒருவன். இதைப்பற்றி முதல்முதல் செய்தித்தாளில் எழுதியவன் நான்தான். எழுத் தாளர் சங்கச்சார்பில் இத் தீர்மானததை மனமுவந்து ஏறகி றேன். தாய்மொழிப்பற்று இல்லாதவர் சித்தூர்ப் பகுதியைத் தாண்டிச்சென்றால், கட்டாயம் தாய்மொழிப்பற்று அடை வார்கள். தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஆட்சிமொழியாவதற்கு யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள்”

பிற சொற்பொழிவாளர்கள்

தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்தித் திருவாளர் இ. எஸ்,

இராகவ முதலியார், எம். எல். ஏ., திருவாளர் டி. சண்முகம் பிள்ளை, எம். எல். ஏ., திருவாளர், பி. அரங்கசாமி ரெட்டியார் எம். எல். ஏ, திருவாளர், சோம இலக்குமணச் செட்டியார், திருவாளர், ஜி. உமாபதி, திருவாளர், டி கணபதி, எம். எல். ஏ., திருவாளர், என். வி நடராசன், உயர்திரு. அருணகிரிநாத அடிகள், திருவாளர், சண்முகாநந்த அடிகள் முதலியோர் தம்தம் கருததுக்களை எடுத்துக் கூறினார்கள்.

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

"சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் முயற்சியின் காரணமாகப் பல்வேறு கட்சியினரும், பல்வேறு கருத்து வேறுபாடுள்ளவர்களும் ஒன்றுகூடியதற்கு மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு கட்சிக்காரரும தம்தம் கைகளில் இத்தீர்மானத்தை எடுத்துச்சென்று முயறசியுடன் வெற்றிபெறுவார்களா. தமிழ் அல்லாத பகுதியிலே தமிழ் ஆதிக்கம செலுததவேண்டும் என்ற வீம்பு எண்ணம அல்ல நம முயற்சி. நம் கொள்கை நேர்மையானது; தாய்மொழிப்பற்று இன்றித் தாய்நாட்டுப்பற்று ஏற்பட முடியாது. சிறிய நாடாகிய அபிசீனிய மக்கள் தங்களுக்கென ஒருமொழி கொண்டிருக்கிறார்கள். அவ்வாறிருக்கத் தமிழாட்சி கூடாதா? அல்லது முடியாதா?

ஆட்சிப பீடத்திலே தமிழை ஏற்ற ஆசைப்படுகிறோம். இதற்கு எதிர்ப்பாக யாரும இருக்கமுடியாது. வீழ்ச்சியுற்ற நம் நாடு எழுச்சிபெறவேண்டுமானால், நாம் ஒத்துழைக்கவேண்டும். இறந்தகாலத்தைத் திரும்பிப் பார்க்கிறோம. வீழ்ச்சியுற்ற நாடு எழுச்சிபெற வரலாறு தேவைப்படுகிறது. இது தெரியாத காரணத்தினால், திருக்குறள் ஒரு மூலையில் கிடக்கிறது. பல தமிழ்ச்செல்வங்கள் மூலையில் முடங்கிக்கிடக்கின்றன. நம் நாகரிகம் ஸ்பெயின் நாடுவரை சென்றது. எல்லா நாடுகளுக்கும் எண்கள் கற்றுக்கொடுத்தவன் தமிழன்; வார நாட்கள வரையறுத்துக்கொடுத்தவன் தமிழன்; தாய்மொழியிலே என்ன இருக்கிறது என்று சிலர் சொல்வதைக் கேட்க வெட்கப்படுகிறேன். இன்று இலக்கணம் வரையறை செய்யாத மொழிகள், நாகரிகம் அடையாத மொழிகள், மொழி வளப்பம் பெறாத மொழிகள் எல்லாம் நாட்டை ஆளும்போது, சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணத்தை வரையறைசெய்த தமிழ் மொழி ஏன் ஆட்சிசெய்ய முடியாது? உலகிலுள்ள இலக்கிய மொழிகளிலே ஒன்று தமிழ். சமக்கிருதம், கிரேக்கம், இலத்தீன் முதலிய இலக்கிய மொழிகள் பேச்சுவழக்கில் அழிந்துபட்டுவிட்டன.

தொல்காப்பியத்தில் 'வடவேங்கடம் தென்குமரியா யிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' என்று தமிழகததுக்கு எல்லே வகுத்துக் கூறப்படுகிறது. தமிழகம் வாழவேணடுமாளுல், தமிழ் ஆட்சிமொழியாகியே தீரவேண்டும ஒரு நாட்டு மொழியை அழிபபதுதான் கேவலம். தமிழர்கள் எனற நிலேயில் ஒன்றுகூடி இருக்கிறேம். மொழியால் அழைக்கப்படும்போது நான் தமிழனுக இருக்கிறேன். பிறமொழி சேர்த்தால் தமிழ் வளரும் என்கிருர்கள். தமிழ் வளரக்கூடிய மொழி; பிற மொழிக் கலப்பால் அழியும்.

ஆங்கிலமும் இந்தியும் பிறமொழிக் கலப்பால் வளர்ச்சி யடைவதாகச் சான்று கூறுகிருர்கள். அவை இயற்கை மொழிகளல்ல ஆளுல், தமிழ் தனித்தது, தமிழுக்கு வேர்ச் சொற்கள் உண்டு. வேதாரண்யம என்ற பிற சொல் வந்ததால் திருமறைக்காடு என்ற அழகான தமிழ் ஊர்ப்பெயர்ச் சொல் மறைந்தது; விருத்தாசலம் என்ற பிறசொல் வந்ததால் முதுகுன்றம் என்ற தூய தமிழ் ஊர்ப்பெயர்ச்சொல் மறைந்தது; ஜலம் என்ற சொல் வநததால் தண்ணீர், நீர் என்ற தனித் தமிழ்ச் சொற்கள் வழக்காறற்றுவிட்டன. நமஸ்காரம் என்ற சொல் சேர்ந்ததால் வணக்கம் என்ற தமிழ்ச்சொல்லே இழந்தது. தமிழ் ஆட்சிமொழியாளுல், தமிழ வளரும். பாராளு மன்றம் என்ருல் உணர்ந்துகொள்ள முடியும்; சட்டசபை, பார்லிமெண்ட் என்ற அயற் சொறகள் வாரா. பிறநாட்டுப பொருள் களே இறக்குமதியாக்கும்போது அவற்றின்மேல் வரிவிதிப்ப தற்கு எப்படி ஒரு குழு (போர்டு) அமைககப்பட்டிருக்கிறதோ, அதேபோல இறக்குமதியாகும் வெளிநாட்டுப் பொருள்களுக் கும் தனித்தமிழில் பெயரிட ஏன் ஒரு குழு அமைக்கக்கூடாது? இ. மு. சுப்பிரமணியபிள்ளேயும் இன்னும பல தமிழறிஞாகளும ஒன்றுகூடி வெளிநாட்டுப் பொருளாகிய 'சைக்கிள்' இறக்குமதி யாகும்பொழுது அதற்கு ஈருருளி என்ற அழகிய தமிழ்பபெயர் கொடுத்திருந்தால், சைக்கிள் மறைநது போயிருக்கும். ஈருருளிதான் நிலேத்திருக்கும். வெளிநாட்டுச் சொற்களேத் தமிழ்ச் சொற்களாக ஆக்குமபோது தமிழறிஞர்களேக் கலந்து கொள்ளவேண்டும்.

படி என்ற தமிழ்ச்சொல் பலவிடங்களில் பலவித பொரு ளேக் கொடுக்கக்கூடிய சொல் ஆகும். இதேபோல ஒவ்வொரு சொல்லேயும் ஆராய்ந்தால் தமிழ் இயற்கையோடு ஒன்றியது என்பதைக் காணலாம். தற்போது நூற்றுக்குப் பதினறு பேர் படித்தவர்கள். எண்பத்துநான்கு பேர் ? -படியாதவர்கள். தமிழ்மொழி ஆட்சிக்கு வந்தால், எல்லாரும் எளிதில் படிக்க

லாம். உலகத்தோடு உறவுகொள்ள ஆங்கிலம் வேண்டும். தமிழ் போதாது. தற்போதுள்ள சூழ்நிலைகளைச் சரிப்படுத்தத் தாய்மொழியாகிய தமிழே போதுமானது. தமிழ்மொழி தமிழ்நாட்டு ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக நான் ஆதரிக்கிறேன்."

திருவாளர், இ ரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவுக்குப் பின்னர் தலைவர் தம் முடிவுரையை ஆற்றினார். தலைவர் தீர்மானத்தை மக்கள் சமமதத்திற்குவிட்டு ஒப்புதலைக் கேட்டார். எல்லாரும் கைதட்டி தம் மகிழ்ச்சியையும் ஒப்புதலையும் தெரிவித்தார்கள். தீர்மானத்தை எதிர்ப்பவர் உண்டா என்று கேட்டபோது "இல்லை இல்லை" என்ற குரல் எங்கும் ஒலித்தது. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சியாளரும், மாநாட்டுச் செயலாளருமாகிய, திருவாளர், வ. சுப்பையாபிள்ளை அவர்கள் நன்றிகூற மாநாடு இனிது முடிந்தது.

தொகுத்தவர்: முத்தமிழ்மணி.

பொங்கல் நன்னாள் வாழ்த்து

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

நேரிசை வெண்பா

க. அறந்தழைக இன்பம் அலர்க தமிழே
சிறந்தமொழி யாயெங்குஞ் செல்க—பிறங்கொளிசேர்
தைத்திங்கள் முன்னாள் தவழ்ந்துவரு பொங்கல்நன்னாள்
எத்திக்கும் ஓங்க இனிதே.

உ. நென்மணி கூலம் நிறைந்த வளர்ந்தது
மனமாடோ டாடும் மகிழ்கூரப்—பன்னுகின்ற
பொங்கல் புதுநாள் பழநாள்போல் வந்ததால்
எங்கும் களிக்க இசைந்து.

௩. பாலாறு நெய்யாறு பண்டமெலாம் தந்தஇன்ப
மேலாறு காட்டுபொங்கல் மேதினியில்—ஏலாரும்
ஏற்கப்பாற் பொங்கலவிழ் எல்லாரும் உண்பவே
நாற்களனும் வாழ்க நயந்து.

கரந்தைக்கவியரசு மறைவு

[பேராசிரியர், திரு. ஔவை சு. துரைசாமி பிள்ளை, மதுரை.]

கரந்தைக்கவியரசு. திரு. R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள் மறைந்தசெய்தி தமிழகத்துக்கு இவ்வாண்டில் உண்டான இழப்புகளில் ஒன்று. இனிய தமிழ்ககவி செய்ய வல்ல இனிய புலவரைத் தமிழன்னை இழந்து வருந்துகிறாள். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, பெருமை, பணி முதலிய கூறுகள் எல்லாவற்றிலும நேரடியாகத் தொடர்பு கொண்ட ஒருவரை, சங்கத்தின் தந்தையாய்த் தாயாய்ப் பணி புரிந்த தக்கோரைக் கரந்தைத் தமிழ்ச்சஙகம இழந்துவிட்டது. யாங்கள் எங்கள் ஆசிரியரை இழநதோம்

கண்டர் கோட்டை எனப்படும் கந்தருவக் கோட்டைக்கு அண்மையில் உள்ள மோகனூர் கவியரசர் தோன்றிய நல்ல ஊர். தமிழ்ப்புலமை நலம் சிறந்த பழங்குடி அவரது உயர்நத குடி. தமிழ்க் கல்வி சிறந்ததும் தஞ்சைக்குப் போந்து தமிழாசிரியராக இருந்து அரும்பணியால் அயராத தமிழ்த் தொண்டால் கவியரசாக மேன்மையுற்றவர் ஆசிரியர் வேங்கடாசலம் பிள்ளையாவார்கள். அவரது தமிழ்வாழ்வு கரந்தைத தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து விளங்குவது. சங்கத்தின் வாழ்வும் அவரது வாழ்வும் ஒன்றுபட்டவையாகும்.

தஞ்சைத் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் தலைமை தாங்க, கவியரசர் R. வேஙகடாசலம்பிள்ளையவர்கள் அமைச்சராய்ச் செயலாற்றக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் சிறந்த தமிழ்பபணி புரிந்து நாடெங்கும் நல்ல புகழ்பெற்று மேம்பட்டது. அதன் வெள்ளிவிழா விளக்கததால் வீறு பெற்றது; அதன்பின்னர்ச் சங்கததிற்குப் பொருள் சிறிது சேர்ந்தது; கடமைகள் பெருகின. தமிழவேள் மறைந்தார்; பொருள் வளம் சுருங்கிற்று; செயலொளி குறைந்தது. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்றபடி பொருளளவு சிறுமையுற்றுப் பெரும்பணி ஆற்றி வருகிறது.

இதற்கிடையே, கவியரசா தமது தமிழ்ச்சங்க அமைச்சுக் கடைமையைத் தக்க இளைஞர்பால் இருத்தித் திருவையாற்று அரசினர்கல்லூரியில் தமிழ்பபேராசிரியர் பதவியேற்றுத் திருவையாறு சென்று சேர்ந்தார். பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய் இருந்ததன் விளைவாக மிகப்பல சிறந்த தமிழ்ப் புலவர்கள் நாட்டில் தோன்றுவாராயினர். பின்னர் அவர்கள்

கரந்தைக்கே வந்து கரநதைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் புலவர் கல்லூரியிற பேராசிரியராய் இருநது முதுமையும தளாச்சியும் எய்தித தமிழ்த்தாயின் தண்ணிய திருவடிநீழலை யடைநதார்கள்.

கவியரசர் க. த. சங்க அமைச்சராய் இருந்தபோது தமிழ்ப் பொழில் என்னும் திங்கள்வெளியீடு தோன்றிறறு. அதன் இரண்டாமாணடில் எனக்குத தமிழ்ச்சங்கத தொடர்பு உண்டாயிற்று. சங்கக் கல்விநிலையத்தில் ஆசிரியர்பணியும நூல் நிலையப்பணியும் புரியுமபேறு எனககுக கிடைததது. அக் காலைக் கவியரசர் எனக்குத தமிழ் கற்பிககும பேருதவியைச் செய்யலுற்றார்களா. தொலகாப்பியச் சொல்லதிகாரததிற்குத் தெய்வச் சிலையார் எழுதிய உரையை வெளியிடும பணி வந்தது. ஏடு படித்தலும, பெயர்த்தெழுதலும என பணியாயின. இடையிடையே எழும் ஐயங்களை அகற்றுமுகததால் ஒரே காலததில் இளமபூரணா, சேனாவரையா, நசசினார்க்கினியா என்ற உரையாசிரியர்களின் உரைநலங்களை எனககுக் கற்பித்து இன்புறுததுவது கவியரசரின் கலவிபபணியாய் இயஙகிறறு. உரைநலங்களைப் படிதது முடிததேன். நூலும வெளியாயிற்று. யானும் வடஆற்காடு மாவட்டததில தமிழ்பபணி புரியும் செயல் மேற்கொண்டு சென்றேன.

எனக்கு இலக்கணம கற்பிக்கும் பணி தெய்வசசிலையார் உரை வெளியீடாய் நிலவினமையின அககாலை சஙகத்தில் நெருங்கிய தொடர்புற்றிருந்த பேராசிரியர்களான பண்டிதநாவலர், ந. மு. வேங்கடசாமிநாட்டார், பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியாா, எல். உலகநாதபிள்ளை முதலியோர்களின் தொடர்பு எனக்கு எய்துவதாயிற்று.

அவரது தொடர்பு அன்பு செய்வதோடு நில்லாது தமிழறிவு நலகும் ஆசிரியர்களாக இருநது எனக்கு ஐயமகற்றி அவரது நன்றி மறவா மாணவனாய் நிலவுமாறு செய்தது. அவர்கள்பால் என்னைப்பற்றி அன்புரை வழங்கி ஆதரவுசெய்த கவியரசரின கல்விநலத்தை இன்று நினைபபினும என் நெஞ்சு கரைந்துருகுகிறது.

ஒருகால் திருக்காட்டுபபள்ளிக்கு டாக்டர் உ. வே. சாமிநாதையா வநதிருநதபோது ஒருவர் தேட்கடியில் வருந்தி மருநதுண்டு தேறினார். அப்போது நாட்டார், கவியரசர், தண்டாயுதபாணிக் காடவராயர், தமிழவேள் அனைவரும் சூழ இருக்க, "கடிதத இடம்தான் கடுக்கிறது," என்று காடவராயர் சொன்னார். கடியும் கடுக்கிறதும ஒன்றுதானே என்று நாட்டார்

அவர்கள் கூற எல்லோரும் நகைத்தனர். அது எப்படி யெனத் தமிழவேள் ஐயரவர்களைக் கேட்க, அவர்கள் என்னை விடை கூறப் பணித்தார்கள். யான் கடியென்னும் உரிச்சொல் கடுக்கிறது எனத் திரிந்து வினையாயிற்று: "கடுத்தது காட்டும் முகம்," என்றாற்போல என்றேன். அப்போது ஐயரவர்கள் எனக்கு இலக்கணம் கற்பித்த கவியரசரைப் பாராட்டியது இப்போது என் நினைவுக்கு வருகிறது. அவரது பிரிவு என் அறிவைப் பேதுறுவிக்கின்றது. தெய்வச்சிலையார் உரை எழுதிய ஏட்டைத் திரு ஐயரவர்கள்பால் பெற்றுவந்தபோது அவர்கள் கவியரசர் புலமையைப் பாராட்டி, தாம் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டபோது, "பெயர் விழையான்" என்னும் புனைபெயரில் சில திருத்தங்களை மிக்க நுட்பமாக ஆய்ந்துரைத்தாரெனவும் பின்பே அவர்கள் கவியரசரைத் தெரிந்துகொண்டாரெனவும் கூறியது என் நினைவில் எழுகின்றது.

தமிழவேள் மகன் பஞ்சாபகேசன் மறைந்தபோது கவியரசர், தமிழவேள் மனநிலையையும் தமிழன்பையும் வியந்து, "மன்மக்கள் எல்லாம் தன் மக்களெனக் கொள்வானை, என்னை யினிச் செய்வது இடர்," என்று பாடியதுகேட்டுப் பண்டிதமணியவர்களும் நாட்டார் அவர்களும் பாராட்டி யுரைத்ததும், தமிழவேள் அவர்களின் கலங்கிய வுள்ளம் தெளிந்ததும் இன்று நிகழ்வனபோல் நெஞ்சில் தோன்றுகின்றன. இதை நினைவில்கொண்டிருந்து பண்டிதமணி யவர்கள் திரு. வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குக் கவியரசர் என்ற பட்டம் தந்தபோது பாராட்டியதும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் முறுவலித்து மகிழ்ந்ததும் இன்று நினைக்கினும் இன்பம் தருகின்றன.

என் இனிய ஆசிரியர் அவர்களின் நலங்கள் பல நினைவுக்கு வருகின்றன. எதனை நினைப்பேன்! எதனை எழுதுவேன்! இவ்வாண்டு என் மனதுக்கு அமைதி நிலவாதவகையில் பல இழப்புக்களை நல்கிவிட்டது. பொதுநோக்கால் புகழ்பெருகிய திரு. வி. க. மறைந்தார்; அன்பால் நட்பால் அறிவுபெருகிய பண்டிதமணி மறைந்தார்; ஆர்வத்தால் அருளால் சித்தாந்த நுண்பொருள் காட்டிய தூத்துக்குடி சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாத பிள்ளை மறைந்தார்; இறுதியாகப் பழந்தமிழ்ச் செல்வம் எனக்கு நல்கிய கவியரசர் மறைந்தார். இக் கொடுங்காலம் இப் பெருமக்களை மறைக்கலாம். வேறே என்ன செய்ய முடியும்? அவர் தம் புகழ் பொன்றாது நிற்பது. வாழ்க அவர் புகழ், வளர்க தமிழ்.

தமிழ்நாட்டுச் சிற்பக்கலைகள்

[மயிலை, திரு. சீனி. வேங்கடசாமி.]

சிற்பக்கலை அழகுக் கலைகளில் ஒன்று. நாகரிகம் படைத்
துள்ள எல்லா நாட்டவரும் இநதக் கலையை வளர்த்துள்ளார்கள்.
தமிழ்நாட்டிலும் இந்தச சிற்பக்கலையை நம் முன்னோர் நன்கு
வளாத்திருக்கிறார்கள். நமது சிற்பம் உலகத்தவரால் நன்கு
மதிக்கப்படுகிறது.

மிகப்பழைய காலத்தில் சிற்ப உருவங்கள் மண்ணாலும்
சுதையினாலும மரத்தினாலும் அமைக்கப்பட்டன. அதற்குப்
பின்னாக கல்லிலும செம்பு பித்தளை முதலிய உலோகங்களிலும்
சிற்பஉருவஙகள் அமைக்கப்பட்டன. பல்லவஅரசர் காலத்
திலும், பின்னர் சோழஅரசர் காலத்திலும் சிற்பக்கலை
செழித்து ஓங்கி வளர்ந்து உயர்நிலை பெற்றது. சோழர்காலத்
திற்குப பிறகு, அஃதாவது 15-ஆம் நூற்றாண்டிற்குப பிறகு
நமது நாட்டில் சிற்பக்கலை வளர்ச்சி குன்றிவிட்டது என்னலாம.

பல்லவஅரசர் காலத்திலும் சோழமன்னர்காலத்திலும்
கல்லிலும செம்பிலும் அமைக்கப்பட்ட கண்ணையும் கருத்தை
யும கவாகின்ற அழகான சிற்ப உருவங்கள் நமது நாட்டில் ஆங்
காங்கே சிதறிக்கிடக்கின்றன. சிற்பக்கலையின் அழகைச்
சுவைத்து மகிழ்கின்ற நற்பண்பு, நம் நாட்டவரிடத்தில்
(ஒரு சிலரைத் தவிர) இப்போது பெரும்பாலும் மறைந்துவிட்ட
படியினாலே இச் சிற்பஙகள் ஆங்காங்கே சீரழிந்து கிடக்கின்றன.
சிற்பக்கலையின் அழகைச் சுவைத்து அதன் சிறப்பை உணர்ந்து
மகிழும பண்பை நம்மவர் வளர்க்கவேண்டும். ஒரு நாட்டுக்குப்
பொருட்செல்வம் எவ்வளவு தேவையாக இருக்கிறதோ அவ்
வாறே கலைசசெல்வங்களும தேவைதான். ஆகவே, நமது
பழைய கலைச்செல்வங்களைச் சிதறவிடாமலும் அழியவிடாம
லும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை
யாகும். ஏனைய நாட்டவர் தத்தம் கலைச்செல்வங்களைப்
பொன்னேபோல் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். நமது
நாட்டுச் சிற்பக்கலைப் பொருள்கள் நமது நாட்டின் பொதுச்
சொத்து; நம் பண்டையோர் வைத்துச்சென்ற பெருஞ் செல்
வம் என்பதை உணர்ந்து அவற்றைப் பாதுகாக்கவேண்டுவது
நம் எல்லோருடைய கடமையாகும்.

பல்லவ அரசர்களும் சோழமன்னர்களும் கல்லிலும் செம்
பிலும் சிற்பக்கலைகளை அமைத்து வைத்தார்கள் என்று சொன்
னோம். இந்தச் சிற்ப உருவங்கள் நமது நாட்டிலே ஆங்காங்கே

யுள்ள கோயில்களில் அமைந்துள்ளன. முற்காலத்தில் அமைத்த சிற்பக் கலைச்செல்வங்களின் விலைமதிப்பைக் கணித்தால் அவை பல கோடி பொன்பெறும். இவ்வாறு கூறுவது வெறும் புகழ்ச்சி வார்த்தை எனக் கருதவேண்டா. உண்மையில் பல கோடி பொனபெறும் என்பதைச் சிற்பக்கலை வலலவர் ஒப்புக் கொள்வர்.

சிற்பக்கலைகள், கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத திற்கு இன்பங் கொடுக்கும இனிய கலைபபொருள்கள்! அவற் றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன! ஆனால், அவற்றில சிறிது கருததூன்றிக் காணவேண்டும். சற்றுக கலைசசுவையும இருக்கவேணடும். இக் கலையுணர்வு பெற்றோர், அழகிய கலைபபொருள்களைக் காணுந் தோறும் புதியதோர் இன்ப உலகததிலே வாழ்கிறார்கள்.

நமது நாட்டுச் சிற்பக்கலை உருவஙகளில் பல அழிந்துவிட் டன. பல சிற்பக்கலைச்செல்வங்கள மண்ணுள் மறைந்து கிடக்கின்றன. பல சிற்பச்செல்வங்கள், பழைய கோயில் களைப் புதுப்பிக்கிற பெருஞ்செல்வர்களால், அநதோ! அநதோ! கொலைசெய்யப்பட்டன; கொலைசெய்யப்படுகின்றன. (இவ் வாறு கலைச்செல்வஙகள் கொலைசெய்யப்படுவதைப்பற்றி எழுதினால் அது ஒரு பெரிய நூல ஆகும.) மற்றும பல சிற்பக் கலைச்செல்வஙகள ஐரோபபியரால் கொளளைகொணடு போகப் பட்டன. சென்ற இருநூறு ஆண்டுகளாக இருந்த ஆங்கில ஆட்சிக்காலத்திலே, இநதியச் சிற்பஉருவங்களை அயலநாடுக ளுக்கு அனுப்பக்கூடாது என்னும் சட்டம் இல்லாதபடியினாலே நம் சிற்பக்கலைப்பொருள்கள் அமெரிக்கா, பிரான்சு, இங்கி லாந்து முதலான மேல்நாடுகளுககுக் களளததனமாகக் கொணடு போகப்பட்டன. நம் கோயில்களிலிருநத (கல்லிலும் உலோகத் திலும் செய்யபபட்ட) சிற்பக்கலைப்பொருள்களைக கள்ளத்தன மாக வாங்கிய ஐரோப்பியர்களுக்கும் அமெரிககர்களுக்கும அப் பொருள்களைக் கள்ளததனமாக விறறவர் யார்? நம் நாட்டுக் கோயிற் "பெருச்சாளிகள்" தான். எலிகளுக்கும் பெருச்சாளி களுக்கும் கலைபபெருமை தெரியுமா? சிறுகாசுக்குப பெருஞ் செல்வமான சிற்பக்கலைகளைக் கொடுததுவிட்டார்கள! களவா டிய பொருள்களைக் கள்ளர்கள் சிறுதொகைக்கு விற்பதுபோல.

தெரிந்தும தெரியாமலும் மேல்நாடுகளுக்குச் சென்ற நம் நாட்டுச் சிற்பக்கலைப்பொருளகள அந் நாட்டுக காட்சிச்சாலை களில் காட்சியளிக்கின்றன. நமது நாட்டைவிட்டுச சென்ற அவை மறுபடியும் நமது நாட்டிற்கு வருமா? ஒருபோதும் வாரா. இலட்சக்கணக்காக டாலாகளைக் கொட்டிக்கொடுத்

தாலும் அப் பொருள்களை அவர்கள் திருப்பிக்கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள கலைப்பொருள்களின் சிறப்பை நன்கறிந்தவர்கள. நமமவரைபபோன்று ஏமாளிகள் அல்லா: காட்சிச்சாலைகளில் அல்லாமல் தனிபபட்டவரிடத்திலும் நம் கலைச்செல்வங்கள சென்றுவிட்டன இதற்காக மேல்நாட்டாரைக் குறைகூறுவதில் பயன்இல்லை. கலைச்செல்வங்களில் அவர்களுக்குள்ள ஆர்வததையும் கலையுணர்வையும நாம் மெச்ச வேண்டும. மதுரை மாவட்டத்தில் இருந்த ஒரு பெரிய கருங்கல் மண்டபத்தை—சிறபக்கலை பொருநதிய பெரிய மண்டபததை அமெரிக்காவில உளள. ஒரு பெரிய நகரத்திற்குக் கொண்டு போய் இஙகிருநதமாதிரியே அங்கு மண்டபம கட்டியிருக்கிறார்கள்! இந்த மணடபததைப்பற்றி ஒரு புததகத்தையும எழுதியிருக்கிறாரகள. இபபோது வேலூர்க்கோட்டையில் இருக்கிற, மிகச் சிறந்த சித்திரவேலை யமைந்த கருங்கல் மண்டபம் சிறபக்கலைக்குப் போபோனது இநத மண்டபததை அடியோடு பெயர்ததெடுததுக் கொண்டுபோய் இங்கிலாநது தேசத்தில் அமைக்க ஆங்கிலேயா சென்ற நூற்றாண்டில் முயற்சி செய்தார்கள். ஆனால், நலல வேளையாக, இந்த மண்டபத்தை ஏற்றிக் கொண்டுபோக வநத கப்பல் கடலில மூழ்கிவிட்டது. ஆகவே, அந்த முயற்சி கைவிடபபட்டது. அந்தக் கப்பல் மூழ்கியிரா விட்டால், வேலூரில் உள்ள சிற்பக்கலை மண்டபம் இபபோது இலண்டன் மாநகரததில காட்சி யளித்துக்கொண்டிருக்கும்.

ஒரு பிரெஞ்சுக்காரா நமநாட்டுச் சிற்பக்கலைப்பொருள்கள் பலவற்றைப பாரிஸ்நகரத்திறகுக் கொண்டுபோய்விட்டார். அவர் கொணடுபோனவை யாவும் பழையகாலத்துச் சிற்பங்களே. தமிழ்நாட்டிலே பேர்போன ஒரு கோயிலிலிருந்த பழைமையான நடராசர் உருவத்தை வெகு தநதிரமாக இவர் பாரிஸ் நகரத்திற்குக் கொண்டுபோய்விட்டாராம. பழைய நடராசர் விக்கிரகத்தைப போலவே ஒரு புதிய நடராசர் விக்கிரகத்தைச் செய்விதது, புதிய விக்கிரகததைக் கொண்டுபோய் அக் கோயிலில் வைத்துவிட்டுப் பழைய நடராசர் விக்கிரகத்தை அவர் எடுத்துக்கொண்டு போய்விட்டாராம் கைக்கூலி பெற்றுக் கொண்டு அக் கோயில் "பெருசசாளி" பழைய விக்கிரகத்தைக் கொடுததுவிட்டுப் புதிய நடராச விக்கிரகத்தை வாஙகிக்கொண்டதாம்! இவ்வாறெல்லாம் நம் நாட்டுச் சிற்பக்கலைபபொருள்கள் வெளிநாடுகளுககுப போய்விட்டன.

நற்காலமாக, நாம் குடிஅரசு பெற்றபிறகு, நம் அரசாங்கத்தார், நமது நாட்டுக் கலைபபொருள்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படக்கூடாது என்று உததரவு போட்டிருக்கிறார்கள்.

மேல்நாட்டார் கள்ளத்தனமாகவும் நல்லதனமாகவும் கொண்டுபோன கலைச்செல்வங்கள் போகட்டும். பழைய கோயில்களை இடித்துத்தள்ளிப், புதிய கோயில்களை அமைக்கும் ம் நாட்டுப் பெருஞ்செல்வர்கள் செய்த நாசவேலையினால் அழிந்துபோன கலைச்செல்வங்கள் போகட்டும். இவைபோக, மண்ணிலும் கிணறுகளிலும் குளங்களிலும் மறைந்துகிடக்கும் கலைச்செல்வங்கள் போகட்டும. இவையெல்லாம் போனாலும் ட்டு, இன்னும் ஏராளமான கலைச்செல்வங்கள் இப்போதும் எஞ்சியுள்ளன. பல சிற்பக்கலைப்பொருள்கள் இருட்டறை களில் மறைந்துகிடக்கின்றன. பல சிற்பக்கலைப்பொருளகள் ற்பல கோயில்களில் கலைச்சிறப்பு உணராதவர்களால் புறக் கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன. பல கற்சிற்பங்கள் வயல்களி லும் ஊர்ப்புறங்களிலும் வீழ்ந்துகிடப்பதைப் பல இடங்களில் கண்டிருக்கிறேன். குளங் குட்டைகளின் ஓரங்களில் துணி துவைக்கப் போட்டிருந்த சில கற்களைப் புரட்டிப் பாாத்தபோது அவற்றில் சிற்பங்கள் அமைந்திருந்ததைக் கண்டிருக்கிறேன். இவையெல்லாம் எதைத் தெரிவிக்கின்றன? நமது நாட்டில் சிற்பக்கலையுணர்வும், சிற்பக்கலைகளைக் கண்டு சுவைக்கும அறி வும் மங்கி மழுங்கி மறைந்துவிட்டன என்பதைக் காட்டுகின் றனவன்றோ? கலை, கலை என்று தாள்களிலும் மேடைகளிலும் எழுதப்படுகின்றன; பேசப்படுகின்றன. கலை என்றால் சினி மாவும் நடனமும் இசையும் நாடகமும்தான் என்று பெரும் பாலோர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். சிற்பம் ஓவியம் முதலிய கலைகளையும் போற்றவேண்டும்.

நம் நாட்டுச் சிற்பக்கலைப்பொருள்கள் பெரும்பாலும் சமயத் தொடர்புடையவை. சைவ வைணவ பௌதத சைன சமயத் தொடாபான பல சிற்பங்கள் நமது நாட்டில் கல்லிலும் செம்பிலும் அமைந்து கிடக்கின்றன. சமயப்பகைமை பாராட் டாமல் அக் கலைப்பொருள்களையெல்லாம் செவ்வனே பாது காக்கவேண்டும். சமயப்பகையினால் அழிக்கப்பட்ட சிற்பக் கலைச்செல்வங்கள் பல. எல்லாச் சமயத்துச் சிற்பங்களிலும் கலையழகு உண்டு. ஆகவே, கலைச்செல்வங்களில் சமயப்பகை யும் சமயப்பொறாமையும் காட்டல் ஆகாது.

நான் எழுதிய "இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்" என்னும் நூலில், சிவபெருமானுடைய தாண்டவ மூர்த்தங்கள் (நடராசர் உருவங்கள்) நூற்றெட்டு உண்டென்றும் அவற்றில் பல நமக்குக் கிடைக்கவில்லை என்றும் எழுதியிருக்கிறேன். அந்நூல் வெளிவந்த பிறகு வேறு சில புதிய தாண்டவ உருவங் கள் கிடைத்தன. அண்மையில் மற்றொரு புதிய நற்செய்தியை

அறிந்தேன். அஃதென்னவென்றால், சுமார் ஐம்பது அல்லது அறுபது தாண்டவ உருவங்கள் தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் இருக்கின்றன என்பதே. இராச இராசசோழன் கட்டிய தஞ்சைப் பெருடையார் கோயிலிலே (பிருகதீசுவரர் கோயில்) மறைந்துகிடந்த ஒரு இடம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடம் வெளிச்சம் இல்லாமல் மிக இருட்டாக உள்ளது. இங்குக் கருங்கல்லில் செதுக்கியமைக்கப்பட்ட அழகிய திருவுருவங்கள (தாண்டவத் திருமேனிகள்) காணப்படுகின்றன. மற்றும் பல கற்கள் சிற்பம் அமைக்கப்படாமல் கிடக்கின்றன. சிவபெருமானுடைய தாண்டவ உருவங்கள் நூற்றெட்டையும் அமைக்கத் தொடங்கிச சிற்பிகள் வேலைசெய்து கொண்டிருநத காலத்தில் எக்காரணத்தினாலோ அரைகுறையாய் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கோயிலில மறைவாக உள்ள இந்தக் காபபகக்கிருகம கண்டு பிடிக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றனவாம். ஆனால், இச் செய்தி எக்காரணத்தினாலோ மறைதது வைக்கப்படடிருக்கிறது கலையழகில் ஈடுபட்டு இன்புறுகிற கலைச் செல்வர்கள் நேரில்சென்று இச் சிற்பங்களைப் படம் எடுத்து உலகத்தாருக்கு வெளிப்படுத்தவேண்டும். இந்த இடம் மிக்க இருட்டாக இருப்பதால் புகைபபடம் எடுப்பது கடினம். தகுந்த வெளிச்சங்களோடு சென்று படம் பிடிக்கலாம். அரசாஙகத்து நிலவியற்பகுதி அதிகாரிகளும் கோயில்அதிகாரிகளும் ஒததுழைத்து, மக்கள் கண்டு மகிழ வழிவகை செய்யவேண்டும.

நமது நாட்டில் கலைச்செல்வங்கள் எல்லாம் எப்படி மறைந்து கிடக்கின்றன என்பதைத் தெரிவிக்கவே இதனை இங்குக் குறிப்பிட்டேன்

நான் சென்ற சில ஊர்களில், சிறிதும் எதிர்பாராத இடங்களில், எதிர்பாராத விதமாகப பழைய சிற்ப உருவங்கள் இருப்பதைக் கண்டு வியப்படைந்தேன். சோழர் காலத்துக்கு முற்பட்ட பல்லவர்காலத்துச் சிற்பங்களை எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத விதமாகக் காண்பது எவ்வளவு எளிதானது!

எனவே, நம் நாட்டிலே சிற்பக்கலைப் பொருள்கள் இன்னும் ஏராளமாக உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, போற்றிப் பாதுகாத்து வைப்பதோடு, அக் கலைச்செல்வங்களைப் பொதுமக்கள் கண்டு சுவைக்கும்படி பொதுஇடங்களில், அல்லது பொருட்காட்சிச் சாலைகளில் அமைக்கவேண்டும்.

நமது நாடு கலைச்செல்வங்களை ஏராளமாகக் கொண்டுள்ளது. அழகுக்கலைகள் எல்லாம் நமது நாட்டில் நிரம்பியுள்ளன. அவற்றைப் பாதுகாக்கவேண்டுவது நம் கடமையாகும்.

கிராமம்

[திரு. T. V. சதாசிவபண்டாரத்தார்]

தென்னார்க்காடு மாவட்டத்தில் கிராமம் என்ற பெயருடைய ஊர் ஒன்றுள்ளது. இது விழுப்புரத்திற்குத் தென்மேற்கே பத்துக்கல் தூரத்திலுள்ள திருவெண்ணெய்நல்லூர் ரோடு என்ற புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் இருக்கின்றது. இவ்வூரிலிருந்து வடக்கே இரண்டுகல் சென்றால் சுந்தர மூர்த்தி சுவாமிகளை இறைவன் தடுத்தாட்கொண்ட தலமாகிய திருவெண்ணெய்நல்லூரைக் காணலாம். நகரங்களும் பட்டினங் களும தவிர எஞ்சியுள்ள தமிழநாட்டுச்சிற்றூர்கள் எல்லாம் கிராமங்களென்றே பொதுவாக வழங்கப்படுகின்றன. இந் நிலையில் ஓர் ஊர்மாத்திரம் கிராமம் என்ற சிறப்புப்பெயரால் வழங்கிவருவது வியப்பைத் தருகின்றது. ஆகவே, இவ்வூர் எவ்வாறு இப்பெயர் எய்தியது என்பது ஆராய்தற்குரிய தொன்றும். தமிழ்நாட்டூர்களின் பழைய பெயர்களையும் அவ்வூர்கள் இடைக்காலத்தில் எய்திய வேறுபெயர்களையும் அவற்றின் வரலாற்றையும் அறிந்துகொள்வதற்குத் தக்க ஆதாரங்களாக இருப்பவை, பன்னிரு திருமுறைகளும் தமிழ் வேந்தர்கள் காலத்தில் வரையப்பெற்ற கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் ஆகும். எனவே, அவற்றின் துணைகொண்டு இவ்வூரின் பழைய பெயரை ஆராய்ந்தறிய முயலுவோம்.

இவ்வூரிலுள்ள திருக்கோயில் சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகளால் பாடபபெற்ற பெருமை யுடையதாகும் இவ்வடிகளது திருப்பதிகத்தால் இத்திருக் கோயில் திருமுண்டீச்சரம் என்ற பெயருடையது என்பதும் இதில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் சிவலோகநாதர் என்று அக்காலத்தில் வழங்கப்பெற்றனர் என்பதும் இவ்வூர் தென் பெண்ணையாற்றங்கரையிலுள்ளது என்பதும நன்கு புலனா கின்றன. இச்செய்திகளை,

'உரிந்தவுடை யார்துவரால் உடம்பைமூடி
உழிதருமவ் வூமரவர் உணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் பண்ட மெல்லாம
பறித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரும் இருகரையும் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச சரத்து மேய
சிவலோகன் காண்அவனென் சிந்தை யானே'

என்ற அடிகளது திருப்பாடல் இனிது உணர்த்துதல் காண்க.

திருநாவுக்கரசு அடிகளது திருமுண்டீச்சரப் பதிகத்தில் இக்காலத்தில் கிடைத்துள்ளவை ஒன்பது திருப்பாடல்களே யாகும். இவற்றுள் திருக்கோயிலின் பெயரும் இறைவன் திருநாமமும் கூறப்பட்டுள்ளனவேயன்றி, ஒன்றிலேனும் ஊரின் பெயர் காணப்படவில்லை. திருஞானசம்பந்த சுவாமிகளும் தம் க்ஷேத்திரக்கோவையில் 'மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராமம் முண்டீச்சரம் வாதவூர் வாரணாசி' என்ற அடியில் முண்டீச்சரம் என்னுந் திருக்கோயிற் பெயரைக் குறித்துள்ளனரே யன்றி, இக்கோயில் அமைந்துள்ள ஊரின் பெயரைக் கூறவில்லை.

இனி, கல்வெட்டுக்களின் துணைகொண்டுதான் ஊரின் பழைய பெயர் யாதெனக் காண்டல் வேண்டும். கிராமம் என்னும் ஊரிலுள்ள இத்திருக்கோயிலில் பத்தொன்பது கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள், மூன்று கல்வெட்டுக்கள் பாண்டியர் ஆட்சிக்காலத்திலும் இரண்டு கல்வெட்டுக்கள் விசயநகரவேந்தர் ஆட்சிக்காலத்திலும் வரையப்பெற்றவை. எஞ்சிய கல்வெட்டுக்கள் எல்லாம் சோழமன்னர்களின் காலத்தனவாகும். இக்கல்வெட்டுக்களுள் மிக்க பழைமை வாய்ந்தவை முதற்பராந்தக சோழன்காலத்துக் கல்வெட்டுக்களேயாம். இவற்றுள் ஒன்று, பல வரலாற்றுண்மைகளை நன்கு விளக்குவதாக உள்ளது. இக்கல்வெட்டின் முற்பகுதி, மூன்று வடமொழிச்சுலோகங்களிலும் பிற்பகுதி தமிழ்மொழியிலும் அமைந்துள்ளன. முற்பகுதி, கேரளதேயத்தில் புத்தூரில் பிறந்தவனும் இராசாதித்தனுடைய படைத்தலைவனுமாகிய வெள்ளங்குமரன் என்பான் பெண்ணையாற்றங்கரையிலுள்ள மௌலி கிராமத்தில் மந்தரமலை போன்ற கற்றளி ஒன்று மாதேவர்க்கு அமைத்தனன் என்று உணர்த்துகின்றது. தமிழ்மொழியிலுள்ள கல்வெட்டுப் பகுதியை அடியிற் காண்க:

(1) 'ஸ்வஸ்திஸ்ரீ கலியுக வர்ஷம நாலாயிரத்து நாற்ப (2) த்து நாலு மதுரைகொண்ட கோப் பரகேசரிவன்மற் (3) கு யாண்டு ந௰சு ஆவது கலியுக........ன்று நாள் (4) பதினைங்கு நூறாயிரத்து எழுபத்தேழாயிரத்து (5) முப்பதது ஏழுஆக திருமுடியூர் ஆற்றுததளி (6) பெருமானடிகள் உடைய........................ம திரு (7) க் கற்றளியாக அமைப்பித்து இவ்வாட்டைம (8) கர நாயற்றுச் சனிக்கிழமை பெற்ற இரேவதி ஞான் (9) று கும்பதாரையால் (10) மூன்றுச்சி பதினறு (11) அடியில் ஸ்ரீ ஆற்றுத்தளிப் (12) பெருமானடிகளை (13) த் திருக்கற்றளியினுள் (14) ளே புக எழுந்தருளுவித்து பிரதிஷ்டை செய்வி(15)த்தார் சோழர்கள் மூலப் (16) ருத்யர் ஸ்ரீ பராந்தக தேவரான

(17) ஸ்ரீ வீர சோழப்பெருமானடிகள் (18) மகனர் ராஜாதித்ததேவர் பெரும் (19) படை நாயகர் மலைநாட்டு நந் (20) திக்கரைப்புத்தூர் வெள்ளங் (21) குமரன் இது பன்மாகேஸ்வர (22) ரக்ஷை ரக்ஷிப்பார் ஸ்ரீ பாதம்தலை (23) மேலன' [1]

இக் கல்வெட்டுப்பகுதியால் மதுரைகொண்ட கோப் பரகேசரிவர்மனாகிய முதற் பராந்தக சோழனது ஆட்சியின் 36-ம் ஆண்டாகிய கலியப்தம் 4044ல் திருமுடியூரிலுள்ள ஆற்றுத் தளிப்பெருமானடிகளின் திருக்கோயில கருங்கற்கோயிலாக அமைக்கப்பெற்றது என்பதும் அதனை அவ்வாறு அமைப்பித்தவன், முதற்பராந்தக சோழன் புதல்வன் இராசாதித்த சோழனுடைய பெரும்படைத்தலைவனும சேரநாட்டு நந்திக்கரைப் புத்தூரனுமாகிய வெள்ளங்குமரன் என்பதும் நன்கு வெளியாகின்றன. இதில் குறிக்கப்பெற்றுள்ள கலியுக ஆண்டு, கி. பி. 943 ஆகும். [2]பெண்ணையாற்றங்கரையிலிருத்தல் பற்றி இத் திருக்கோயில் ஆற்றுத்தளி என்று அந்நாளில் வழங்கப்பட்டுள்ளது. அன்றியும், இற்றைக்கு ஆயிரத்துப்பத்து ஆண்டுகளுக்குமுன் இக்கோயில் அமைந்துள்ள ஊர் திருமுடியூர் என்ற பெயருடன் விளங்கியது என்பது தமிழ்க் கல்வெட்டுப்பகுதியால் தெளிவாக அறியக்கிடத்தல் காணலாம். இக்கல்வெட்டின் முற்பகுதியிலுள்ள வடமொழிச்சுலோகத்தில் இவ்வூர் மௌலி கிராமம் என்று கூறப்பட்டிருத்தல் உணரற்பாலதாகும். எனவே, திருமுடியூர் என்பது மௌலிகிராமம் என வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. மௌலி என்ற வடசொல், முடி என்று பொருள்படும் என்பது கற்றோர் பலரும் அறிந்ததேயாம். சோழமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் திருமுடியூா என்று வழங்கப்பெற்ற இவ்வூர், பிற் காலததில் மௌலிகிராமம் என்னும் வடமொழிபெயர் எய்தி இறுதியில் கிராமம் என்று வழஙகப்பட்டுவருதல் அறியத் தக்கது. ஆகவே, திருமுடியூர் எனப்படுவதே இதன் பழைய பெயர் என்பது நன்கு துணியப்படும்.

---

1. Archaeological Survey of India, Annual Report 1905—06, pp. 182—3.
2. Epigraphia Indica, Vol. VIII, p. 261.

'உத்தமம் சூழ்ந்த கெங்கயநாயக்கர் பாளையம்'

[திரு. தி. பொ. நாராயணசாமி பாரதி]

(ஒரு செப்பேடு பற்றிய கட்டுரை)

ஊரும் காலமும்:

இப்பொழுது 'உத்தமபாளையம்' என வழங்கப்பெற்று வரும் ஊர், ஸ்ரீவங்காரு திருமலைநாயக்கர் தானம் செய்து கொடுத்த செப்பேட்டில், "சுரபிநதி உத்தமம் சூழ்ந்த கெங்கய நாயக்கர் பாளையம்" என்ற பெயர் தாங்கி இருந்தது. கெங்கய நாயக்கர் யார் எனத் தெரியவில்லை; எனினும் அப்பெயர் உடையார் "பாளையப்பட்டு"டன் இங்குவந்து தங்கி வாழ்ந்திருக்க வேண்டும். அவர் பாளையப்பட்டுத் தலைவராயும் இருந்திருக்க வேண்டும்; அவர் பெயரால் ஊருண்டாயிருக்கவேண்டும்; அவ் வூருக்கு அப்பெயரை வைத்திருக்கவேண்டும். 'சுரபி நதி' என்பது இப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் சுருளியாற்றின் பெயர். இந்நதி பாய்வதால், "உத்தமம் சூழ்ந்த" என்ற அடைமொழி பெற்று, "சுரபி நதி உத்தமம் சூழ்ந்த கெங்கய நாயக்கர் பாளையம்" என்ற பெயருடன் விளங்கிவந்தது. நாளடைவில் "சுரபி நதி" என்ற பெயரும், "கெங்கய நாயக்கர்" என்ற பெயரும் மறைய எஞ்சி நின்ற "உத்தம பாளையம்" என்றே இப்பொழுது வழங்கப்பெற்று வருகிறது. இது தமிழ்இலக்கணத்தில் 'மரூஉ' என்ற வழக்கை ஒட்டியதே. இக்கட்டுரைக்குக் கிடைதத செப்பேடு, சாலிவாகன சகாப்தம 1655-இல் வெட்டப்பெற்றது. இப்பொழுது சாலி: 1876. எனவே இச்செப்புப் பட்டயம் இன்றைக்குச் சரியாக 221 ஆண்டுகளுக்குமுன் வெட்டப்பெற்றது தெளிவு. கிறிஸதவ அப்தம், சாலிவாகன சகாப்தத்தைவிட 78-ஆண்டுகள் பிந்தியது.

பட்டயம் பிறந்த காரணம்; தேதி:

முன் குறிப்பிட்ட 'சுரபி நதி' என்ற சுருளியாறு உத்தம பாளையத்தின் கிழக்கே தென் வடக்காக ஓடுகிறது; இவ்வாற்றின் மேற்குக்கரையில் இவ்வூர் அமைந்துளது. ஊருக்குத் தெற்கேயும், ஆற்றங்கரைக்கு மேற்கேயும் "காளாத்தீசுவரர் ஞானம்பிகை கோயில்" இருக்கிறது. இக்கோயிலை ஸ்ரீவங்காரு திருமலை நாயக்கரோ அவர்தம் முன்னோரோ கட்டியிருக்கவேண்டும். காளாத்தீசுவரர் ஞானம்பிகை 'பல்லக்குச் சேருவை' திருவிளையாடலுக்கு உபய கட்டளையாகக் "கருங்காட்டுக்குளம்" என்ற கிராமத்தை ஸ்ரீவங்காரு திருமலைநாயக்கர், இவ்வூர்

பிச்சக் கணக்கனுக்குத தாரைசாசனப் பட்டயம் பண்ணிக் கொடுத்தார் என்று கூறும செபபுப்பட்டயத்தில தெலுங்கில் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அது (தமிழில்) வருமாறு:

“ஸ்ரீபங்காரு திருமலை நாயனீதாரு, கரும் காட்டூர் வாழும் ஞானம்பிகை அமசசாரிக்குத் தாரை வாாத்து எம் சுய எண்ணத்தால் கொடுத்தோம். (கர நமே ஆசநசராம் ரேக்ரா ஆதுப நெங்ப்ர கோகேத ஸ்ரீராசு—இவ்வரிக்குப பொருள் விளங்கவில்லை.)

இவ்வாறு சாசனம் செய்து கொடுத்த தேதி “பிரமாதீட்ச வருஷம் கார்த்திகைமாதம 26-ஆம தேதி பவர்ணமையும் ரோகிணி நட்சத்திரமும் ‘கஉ’ லவா காணமும் சோமபராக புண்ணிய காலமும சுபயோக சுபகாணமும பெற்ற சுபதினத்தில்” என்று கூறப்பெற்றுளது

ஸ்ரீ பங்காரு திருமலை நாயக்கரும் அவர் விருதுப்பெயர்களும்

இச்சாசனகர்ததா “ஸ்ரீ பங்காரு திருமலை நாயக்கர்” எனத் தெரிகிறது. “பங்காரு” என்பது தெலுங்குச் சொல்; தங்கம் என்பது அதன் பொருள். இவர் பெரியகுளம் மாகாணத்துக்கு அரசப்பிரதிநிதி என்பதும், போடிநாயக்கனூர் ஜமீன்தார் என்பதும, ஏழு தலைமுறைக்கு முன்பு போடிநாயக்கனூர் ஜமீன்தாராக இருநதார் என்பதும, தெலுங்கில்தான் கையெழுத்திடுவார் என்பதும, போடிநாயக்கனூர் ஜமீனில் சில காலம் மானேஜராக இருந்த சிவநேசசசெலவர் வித்துவான் திரு. கு. அண்ணாமலைப்பிள்ளை அவர்கள என்னிடம் கூறினார்கள். அவர்கள் கூறியுதவிய இச்செய்திக்கு மிக்க நன்றி. அரசப் பிரதிநிதி என்று சாசனம் குறிப்பிடும் பகுதி வருமாறு:

“ஸஹஸ்ரீன மகா மண்டலெசுரன ராசாதிராசன ராசப் ரமெசரன ராசமார்த்தாண்டன ராச கமபீரன பாஷைக்குப் புவராய கண்டன் அரியதள விபாடனகண்ட நாடு கொணடு கொண்டநாடு கோடாதான மூவராய கண்டன ஒட்டிய தள விபாடன் துலுக்கர் மொகந்த விழததான எம மண்டலமும் திறை கொண்டருளிய ராசநரேந்திரரான அசுபதி நரபதி நவகோடி நாராயணன் ஆனை கொந்திராயா வெஙகிடபதிராயா விருப்பாட்சிராயா விட்டில்ராயா பிறவுடதேவராய ராமதேவ ராயா இரங்கநாயக்கருக்குப பிரிதிராச்சியம பண்ணுகின்ற சாலிவாகன சகாத்தம் (ஆயிரத்து அறுநூற்று அறுபத்தைந்து) தின மேல விசயநகரத்தில வீத்திருந்து வீர சிம்மாசன ரூடராக க்பிவ்தி சாம்பிராச்சியம் பண்ணி அருளா நின்ற காலத்தில் ஆனை

கொந்தி உழச்சாவடிக்குச் செல்லாநின்ற தாராபுரம் சீமையிலே ஸிசவனுதனுயகரய்யனவர்கள் திருமலேனுயக்கய்யனவர்கள் சொக் கனுதனுயக்கய்யனவர்கள் ரஙகிஷபடிண முதிவிரப்பனுக்கய்ய னவர்கள்வினசாங்க கிஷட்டிண சொக்கனுதனுயக்கய்யனவர்கள் ஸ்ரீ வங்காருத திருமலேனுயக்கனய்யனவர்களுக்கு அமா மாகாண மான தென் மண்டலம் பெரியகுளம் மாகாணத்தில் தென்கரை யான அழநாடு பசுமலே..............."

என்ற இப்பகுதியால் சீரங்க நாயக்கருக்குப் பிரதிநிதியாகப் பெரியகுளம மாகாணத்தை ஆட்சிசெய்துவநதவர் ஸ்ரீ பங்காரு திருமலேநாயககர் எனத தெரிகிறது. இவர் இருநது ஆட்சி செயத ஊர் போடிநாயக்கனூர் என்பதும் மகாவிததுவான கு. அண்ணுமலேப்பிள்ளே அவர்கள் கூறிஞர்கள.

"ஸ்ரீ ராசாதிராசன் ராச பரமேசுரான ராச மார்த்தாண் டன் ராசகம்பீரன் ராசஎனு (எம) பயங்கரன் மதுராபுரிவாரரதி சுபான அகண்டிதல்டமிப் பிறசன்னரான மகாராய ஷதிற வங்காரு திருமலே நாயக்கனய்யனவர்கள்" இவை அவருடைய விருதுபபெயர்கள்

சாசன உரிமையும் கடமையும்

"ராயஷத்திறி தளவாயயனவர்கள் விக்கிரபாண்டியன் கால் போக்கில் கருங்காட்டுக்குளம நஞ்சை, புஞ்சை சகல சமுதாய மும் மாசயம ஷத்தி கரளாத்திசுபரசுவாமி ஞானம்பிகைக்கு பல்லக்கு செருவை திருவிளேயாடலுக்கு உபய கட்டளேயிட்ட படிக்கு ஆ(தி) சந்திராற கதாயி ஆய அனுபவித்துக்கொள்ளத் தக்கவும இந்தக் கிறமம் நான்கெல்லேயிலும உள்ள பட்டிதொட்டி மாவடை மரவரை தொட்டம தொடிகை நிதி நிஷேபம சகல பொகங்களும அமமன் பல்லக்கு செருவைக் கட்டளேக்கு அனுபவித்துக்கொள்ளத் தகவும் இந்தப்படிக்குத் தாரபூருவ மான சாதனம் செய்து குடுத்தபடியினுலே மூ(இ)ந்தானமதுக்கு ஆர் விகாதம் செய்கிறுர்களோ அவர்கள் கெங்கையிலே காராம் பசுவைக் கொண்ண பாவத்திலே பொகடராகவும். கங்கையிலே மாதுருகமனம் செய்த பாவத்திலே பொவராகவும் இத்தானம் பரிபாலனம் பண்ணினவர்களுக்கு சந்தான சமுததியூ சகல அசுவரியமும ராசப் பிறசாதமும் உண்டாவதாகவும் மதுரை யிலே சொக்கலிங்க மீனுட்சி அம்மனேச் செவித்த பலன் அடை யக் கடவராகவும்+முத்தன் ஆசாரி எழுததது 2"

இவ்வாறுகப் பட்டயம் கூறுவதிலிருந்து உரிமையும் கடமை யும் தெரியலாகும்.

பல்லக்கு செருவை

'செருவை' என்பது சேர்வையாயிருக்கலாம். சேர்வை = சேருதல். பல்லக்கிலே சுவாமியும் அம்மனும் சேர்ந்து உலா வருவது விழாவில் ஒரு திருவிளையாடல். இங்ஙனம் சுவாமியும் அம்மனும் சேர்ந்து பல்லக்கிலே சேர்ந்து உலா வருவர் என்பது கையெழுத்துத் தொடரில் உள்ள தெலுங்குச் சொல்லும் வலியுறுத்துகிறது. "அம்சஞ்சாரி" என்பதே அததொடர். அம்சம் = பல்லக்கு, சாரி = சஞ்சரிப்பவா.

கருங்காட்டுக்குளம் கிராமம்

"சின்னமனூர்ச் செப்பேடுகள்" தந்த ஊராகிய சின்னமனூரை யடுத்தது தற்பொழுது "கருங்கட்டான குளம்" என்ற பெயருடைய கிராமம் இருக்கிறது "கருங்காட்டுக்குளம" என்று சாசனத்தில் வந்த பெயரே கருங்கட்டான் குளம் எனறு யிற்று. இக்கிராமத்திற்கு வரும் கால்வாய் ஒன்றுக்கு "ராஜ வாய்க்கால்" என இப்பொழுதும பெயர் உண்டு. சாசனத்தில் வரும் "விக்கிரபாண்டியன்கால் போக்கு" என்பது மேற்கூறிய கால்வாயையே உணாத்தும்.

சாசனம் பெற்றோர்

சாசனத்தில் "பிச்சக்கணக்கன்" என வந்துளது. "கணக்கன்" என்ற சிறப்புப்பெயர், பல்லக்குத் தூக்குவோருக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளையும், "பல்லக்கு செருவை" திருவிளையாடலுக்கு ஏற்படும் செலவுகளையும், சாசனம பெற்ற நிலத்திலிருந்து வரும் வருமானத்தைக்கொண்டு திருவிளையாடல் நடத்தும் கடமையையும உணர்த்துவதாக இருக்கலாம். பிச்சக் கணக்கன் வழியினர் உத்தமபாளையத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடம் உள்ள அச் செபபேடே இக்கட்டுரை எழுத உதவியது.

திருக்குறள் அகவல்

[வித்துவான் திரு. மா வேதாசலம் எம். ஏ., பி. ஓ. எல்.]

க. கடவுள் வாழ்த்து

1. அகர ஒலிமுதல் அடுத்து நிற்குமால்
எழூஉம் எல்லா எழுத்தும்;
முதலிறை உலகு முதலா உடைத்தே.

2. பன்னூல் கற்றதன் பயன்தான் என்னே
தூய அறிவன் துணைத்தாள்
வாய்மை யோடு வணங்கார் எனினே.

3. பூமேல் நடந்தான் புகழ்சால் பூங்கழல்
இடைவிடா நினைநதவர் என்றும்
நீடு வாழ்வார் நிலமிசை யானே.

4. விழைவும் வெறுப்பும் விளையா இறைவன்
அடியினைச் சேர்ந்த அன்பர்க்(கு)
என்றும் இலவே இடும்பை தாமே.

5. இருளான் வரூஉம் இருவினை தாமும்
தோன்றுதல் இல்லை தொல்லோன்
பொருள்நிறை புகழைப் புரிந்தார் மாட்டே.

6. பொறியான் எழூஉம புரைசேர் ஐயவா
முற்றக் கெடுத்தான் முறைமை
நெறியில் நின்றார் நீடுவாழ் வாரே.

7. ஒருவாற் றானும உவமை இல்லான்
அடியினைச் சேர்நதார்க்(கு) அல்லதை
மனத்துக் கவலை மாற்றல் அரிதே.

8. அறக்கடல் ஆய அந்தணன் தாளை
அயரார் நினைவார்க்(கு) அல்லதை
பிறகடல் நீந்தல் பெரிதும் அரிதே.

9. தத்தமக் கேற்ற தன்மை கொள்ளாப்
பொறியிற் பயனில புரையிலா
எண்குணன் தாளை இறைஞ்சாத் தலையே.

10. இறைவன் அடியினை என்றும் நினைப்பார்
எழுமைக் கடலும் இறப்பர்
நீந்தார் அவனடி நினையா தாரே.

(தொடரும்)

மதிப்புரை

(க) குறுந்தொகை விருந்து

[ஆசிரியர்: கோம்பை அ. சுருளாண்டிப் பாவலர் அவர்கள்; வெளியீட்டோர்: கோமபைத தமிழ் இலலத்தார்; விலை. ரூ. 1—0—0.]

நம் பழந்தமிழ்க் கருவூலம் சஙக நூல் தொகுதிகள். அவை பழஙகால நம் நாடு, நகா, வரலாறு, நாகரிகம, தமிழாபண்பாடு இவைகளைத் தெள்ளத் தெளிய விளககுவன.

அச் சங்க நூல் தொகுப்பில் 'குறுந்தொகை' என்னும் நூலும் ஒன்று. இஃது அந்நாள் காதல்வாழ்வைக் கண்ணாடிபோல் தெள்ளத்தெளியக் காட்டுவது.

ஆசிரியா இந்நூலின் சில பாடல்களைத் தனிததனிக் கட்டுரைக ளாக்கிப பட விளககததுடன் தந்துள்ளாா. இந்நூல் தன் பெயருக் கேறபத் தமிழர்ககு விருநதாகவே உளளதெனலாம.

இதில் மடல் ஏறல் முதல் அன்றிலும் பேடும் என்பதுவரை இரு பத்து நான்கு கட்டுரைகள வெளிப்போநதுள்ளன.

ஆசிரியர் ஒவ்வொரு தலைப்பினும் துறையின் விளக்கம எழுதி, அத துறைப்பாடற்கேற்ற பொருளினைத தம தனிததமிழ் உரைநடையில விளககிக காட்டியுள்ளார். ஆசிரியா இவ்விருந்தை விருந்து (புதிய) முறையில் தமிழ்நாட்டுக்குத் தந்த கடப்பாட்டுணாசசியைப் பெரிதும பாராட்டுகின்றோம. தொடாநது இந்நூல முழுதுககுமே வரைநதுத வின தமிழுணஙகிறகு வாடாத பேரணியாக மிளிரும. இதனை முதன மையாக வெளியிட்டுதவிய கோமபைத தமிழஇலலததாரின முயறசிக்கு மகிழ்கின்றோம. இவ் இல்லததாா ஆசிரியரை இது போனற புது முறையில் நூல்கள் எழுதத தூண்டி ஊககி மேலும மேலும நற்பணி புரிய விழைகின்றோம.

(உ) தமிழ்

[ஆசிரியர் எஸ். சதாசிவம் அவர்கள்; வெளியீட்டோர்: கோவை, இன்பவாழவுப் பதிப்பகம். விலை ரூ. 1—0—0.]

தமிழ் என்னுஞ் சொற்கு இனிமை என்பது பொருள் இந்நூல் இனிமை தரும தமிழ்மொழி பற்றிப் பலபட விரிதது எழுதி விளககிய ஆசிரியா அஃகியகனற பேருணாசசி போற்றற் குரியது

இதில் தமிழ்நாடு என்னும தலைப்பு முதல் வேண்டுகோள் என்னும் தலைப்பு இறுதியாகப் பததுத தலைப்புககளில விளககியுளளனா.

'செந்தமிழ் நாடென்னும போதினிலே இன்பத தேன் வந்து பாயுது காதினிலே' என்னும் பாரதியாரின் பணபுரைக் கேறப ஆசிரியர் தமிழ் நாடு என்னும் தலைப்பைத் துவங்கும்போது வேலியாயிரம விளையுட் டாகும் மேகத்தை நினைவுகூாந்து தமிழ்நாட்டு வளஙகெழு சிறப்பையும, அந்நாடு ஆரியக்கலப்பால் வீழ்சசியுறற தனமையையும விளஙக எடுத துரைத்துளளனா. மொழியைப்பற்றிய தலைப்பில தமிழ் என்னும பெய ரையே வேற்றுமொழி எனக கூறுவாா கூற்றை வனமையாகக் கணடிப்பது அவாதம் கரைகாணுத் தமிழ்மொழிப் பற்றுக்கு எடுத்துக காட்டாக இலகு கின்றது. தமிழ் மொழிசசிறப்பைப் பல அறிஞர்களின் அரிய கருததுரை களைக் குறிப்புக்களாகக் காட்டியுள்ளது பாராட்டற் குரித்து.

இன்னும் தமிழ்மொழிக் காழ்ப்புக்கொண்ட பேரறிஞர்களின் உரைகளை யெடுத்துக் காட்டி அவர் தம் அறியாமைப் போக்கினை விளக்கிக் காட்டியுள்ளனர். பிற நாட்டறிஞர்கள் தமிழ்மொழி யொன்றே ஏனைய மொழிகளுக்கெல்லாம் அடிப்படையானதென நிலைநாட்டியுள்ளதை ஆங்காங்கே விளக்கிக் காட்டியுள்ளனர்.

இறுதி வேண்டுகோட் பகுதியில் தமிழர்தம் பொறுப்பற்ற நிலையை, தன்னுடைய தன் மொழி - தன் நாகரிகப்பண்பை உயர்த்தாது உறங்கிக்கிடப்பதை மிகமிக உணர்ச்சியோடு விளக்கிக் கடமைபுரியுமாறு வேண்டியுள்ளனர்.

இதுபோன்ற நன்னூல்கள் நம் நாட்டுக்கு இது காலைத் தேவை. மக்களின்பண்பாடு இன்னும் உயரவில்லை. பொழுது போக்குக்காக என்னென்னவாகவோ நடமாடும் சிறுசிறு நூல்களை வாங்கிப் படித்துக் காலத்தை வறிதே கழிக்கின்றனர். இந்நூல் போன்றவற்றை வாங்கிக் கற்று நல்லன செய்தலில் தலைப்படுதல் தமிழ்மாந்தரின் இன்றியமையாத கடப்பாடாகும்.

ஆசிரியர் இன்னன போன்ற நூல்கள் பல தந்து நாட்டையும் மொழியையும் வளம்படுத்தி என்றும் குன்றாப்புகழுடன் வாழ இறையருளை வேண்டுகின்றோம்.

(ரு) வழிவழி வள்ளுவர்

[**ஆசிரியர்:** ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள், பி. ஏ. பி. எல்., **வெளியீட்டோர்:** பழனியப்பா பிரதர்ஸ், திருச்சிராப்பள்ளி. **விலை.** ரூ. 1—8—0.]

வள்ளுவர் என்றாலே தேனினும் இனிக்கும். ஏன்? உலகத்துக்கே ஒளி வழி காட்டித் திகழ்பவர் வள்ளுவராகலான்.

அவர் தம் முப்பானூல் எங்கெங்கே யார் யார்? நூல்களில் ஊடுருவிக் கலந்து நிற்கின்ற தென்பதை ஆடியின் விளக்கிக் காட்டுவது இந்நூல். இதனைக் கைம்மாறு பேணாது ஆக்கியளித்தோர் சொல்லின் செல்வராகிய பேராசிரியர் ரா பி. சேதுப் பிள்ளையவர்கள்.

இதில் **சிலப்பதிகாரத்திலே வள்ளுவர்** என்பது முதல், **பாரதியார் கவிதையிலே வள்ளுவர்** என்பது வரை ஐம்பகுதிகளாக எடுத்து நன்கு திறம்பட விளக்கியுள்ளனர்.

சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற பழந்தமிழ்க் காப்பியங்களில் வள்ளுவர் மொழியும் பொருளும் பாலொடு தேன் கலந்த தொப்ப, பொன்னொடு மணிஒன்றுபட்ட தொப்பக் கலந்து இரண்டற நிற்பதை ஆசிரியர் தம் தேனினும் கனிந்து இனித்த செஞ்சொற்களால் அமைத்து 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையம்' என்ற மொழிக்கு இலக்காகத் தந்துள்ளனர். சொல்லின் செல்வரைத் தமிழ்நாடு போற்றுங் கடப்பாடுடையது.

இன்னும் இதுபோன்ற பயன் தரும் பன்னூல்களை ஆசிரியரவர்கள் ஆக்கித் தந்து பொன்றாப் புகழுடன் நன்று வாழ்வார்களாக.

செய்திகளும் குறிப்புக்களும்

கோலாலம்பூரில் குறள் இயக்கம் :

மலேயாநாட்டின் ஒரு பகுதியாகிய கோலாலம்பூரில் 4-10-53-ல் நிகழ்ந்த குறள் இயக்கக் குறள் வகுப்புக் கூட்டத்திற்குப் பார்வையாளராகப் போந்திருந்தபோது ம. இ கா. கல்விக்குழுச செயலாளா திரு. வி. ஜே. சோமசுந்தரம் அவர்கள் கூறியதாவது :

“உலகிலேயே தமிழர்பண்பாடு உயாந்தது; அதைத்தான் மேல் நாட்டு வரலாற்று ஆசிரியாகள் கீழ்நாட்டுப் பணபாடு என்றும இந்தியப் பண்பாடு என்றும கூறுகின்றாகள. வரலாற்று முடிபுப்படி இந்தியா விறகென ஒரு தனிப் பணபாடு எப்பொழுதும் இருந்ததில்லை. அது, தமிழாகளின தனிப் பணபாக இருப்பதாலதான், சிஙகை (சிஙகப்பூா)ப் பல்கலைக் கழகத்திலகூட இந்திய மொழிததொடாில தமிழ்மொழியின் வாயிலாக இந்தியப்பணபாட்டைப் பற்றிக் கற்பிக்கவேண்டுமென்று முடிவு செய்துள்ளனர்”

எனத் தம் அரிய கருத்தை வெளிப்படுததியுள்ளனா.

குறிப்பு: வள்ளுவர் பெருமையும் அவா தந்த திருக்குறளும தமிழ் மொழியும கடல கடந்த நாடுகளிலும சென்று தம உணமையொளியைக் காட்டிமிளிர வாய்ப்பளிக்கும் அஙகு வாழும தமிழன்பர்களைப் பெரிதும் பாராட்டுகின்றோம். சிஙகையினும தமிழ்மொழியில் இந்தியப் பணபாட்டைக் கற்பிக்க வேண்டுமென்று பலகலைக் கழகததாா முடிவு செய்திருப்பது கண்டு இஙகே நம் தமிழ்நாட்டில் அதைப் பினபற்றுகினறாா்களா ?

திரு. சற்குணர் நினைவு நாள் :

தமிழ்ப் பெரியார் திரு. ச. த. சற்குணா மறைவு முதலாண்டு நினைவு நாள் விழா, சென்னைப் புரசை எம் சி. டி முத்தையா செட்டியாா உயர்நிலைப் பள்ளியில் சென்னைப் பலகலைககழகத தமிழததுறைத் தலைவர் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவாகள் சீரிய தலைமையின் கீழ் 23-12-53-ஆம் நாள் மாலை ஆறுமணிக்கு நிகழவுற்றது.

மறைந்த தமிழ்ப்பெரியார் சற்குணரின் வாழ்கைகைக்குறிப்பைச் சென்னை பசசையப்பரின் அறநிலையச செயலாளரும சற்குணரின் மாணவரில் ஒருவருமாகிய திரு. டி. வி. இராமசசந்திரன் பி. ஏ. பி. எல். நூலாக வெளியிட்டுள்ளனர்.

இதில் அவரைப் பாராட்டிய பல அறிஞ'களின் கருத்துரைகள் அடங்கியுள்ளன.

குறிப்பு: இவ்வாறுன நினைவுநாட்கொண்டாட்டங்கள் நிகழ்வது தமிழ்மொழிப்பற்றை மிகுவிப்பதாகும். ஆகவே, மகிழ்கின்றோம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை '2-140, பிராட்வே,
அப்பர் அசசகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.